டிசைன் மேல் பல வகையான தையல்கள் எம்பிராய்டரிகளை உருவாக்கும் தையல்கள் உண்டாக்கி அழகுபடுத்தப்படுகிறது.

கலர் வீல் (Color wheel)

வட்ட வடிவமான வண்ண சக்கரத்தில் கொடுக்கப்பட்ட கலர்களில் முதன்மை கலர், (Primary colour) இரண்டாம் நிலைகள், (Secondary colour) மூன்றாம் நிலை (teritary) மற்றும் இவற்றிக்கு உள்ள ஒற்றுமை, வண்ணங்களின் திட்டங்கள் ஆகியவை இந்த கலர் வீல் இருந்து வரையறுக்கப் படுகின்றன.

Water soluble pen and pencils

நீரில் கரையக்கூடிய பேனா மற்றும் பென்சில்கள் டிசைனை தற்காலிகமாக துணியில் வரைய பயன்படுகிறது சலவை செய்யப்படும்போது குறிக்கப்பட்ட கோடுகள் அழியப்படுகிறது.

அலங்கார பூத்தையல் தொழில்நுட்பம் (Surface ornamentation technique embroidery) - அடிப்படை கைத்தையல் மற்றும் அலங்காரம் (Basic hand stitch Decorative)

தட்டையான தையல் (Flat stitches)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

- **அடிப்படை கை எம்பிராய்டரி தையல் பற்றி தெரிந்து கொள்ளுதல்**
- **தையலின் பயன்பாடுகளை அறிதல்**
- **அடிப்படை தையல்களுக்கு பொருத்தமான டிசைனை தேர்ந்தெடுத்தல்.**

ரன்னிங் தையல்

இது ஒரு அடிப்படைத் தையலாகும், தையல்களுக்கு பொருத்தமான (டிசைனை) design தேர்தெடுக்கவும். அடிப்படை தையல்களில் ரன்னிங் தையல் பற்றி தெரிந்து கொள்வது மிகவும் அவசியம், வெற்றிகரமான எம்பிராய்டரி வேலைக்கு அடிப்படை தையல்களை தைக்கும் விதம் பற்றி கற்பது அவசியம் எம்பிராய்டரியை தொடங்கும் போது டிசைனை துணியில் வரைந்து கொள்ள வேண்டும் ரன்னிங் தையல் அவுட் லைன் போட பயன்படுத்தப்படுகிறது. அதே போல் தையலை அலங்கரிக்கவும் அடிப்படை தையலாகவும் பயன்படுகிறது இந்த அடிப்படை தையலை பயன்படுத்தி பல்வேறு தையல்கள் செய்யப்படுகின்றன அவையாவன விப்புடு ரன்னிங் (Wipped running), லேசுடு ரன்னிங், (laced running), டபுள் பேக் லேசுடு ரன்னிங் (double back laced), டபுள் விப்புடு ரன்னிங் (double wipped running), டபுள் லேசுடு ரன்னிங் (double laced running).

விப்புடு மற்றும் வோவன் அலங்கார தையல்கள் (whipped and woven decorative stitches) டிசைனின் அவுட் லைன் (out line) தைக்க ஆதாரத் தையலாக பயன்படுகிறது. இத்தையலை தைக்கும் போது தையலின் அளவும் இடைவெளியின் அளவும் சமமாக இருக்க வேண்டும்.

ரன்னிங் தையல் விரைவாகவும் சுலபமாகவும் செய்ய முடிகிறது. இது வளைவான டிசைன்களை தைக்க பயன்படுகிறது. டிசைன் முழுவதையும் இத்தையலை கொண்டு நிரப்பித் தைக்கவும் முடியும்.

கெட்டித் தையல் (Back Stitches)

பேக் ஸ்புச் அல்லது கெட்டித் தையல் அடிப்படை தையல்களில் ஒன்றான கை தையல்களின் வலுவான தையலாகும், கெட்டித் தையலில் இருந்து பல கிளை தையல்கள் உருவாகின்றன சிறப்பு வளைவுகளை உருவாக்க (Back sitched) கெட்டி தையல் பயன்படுகிறது. சங்கிலி தையல் (Back with (Chain Stitch) மாறுபட்ட வண்ணத்துடன் ஒவ்வொரு சங்கிலி தையலின் வளையத்தின் மையத்திலும் மீண்டும் தையல் பிணைக்கப்பட்டு தைக்கப்படுகிறது.

கெட்டித்தையல் (Back stitch)

எல்லா வகையான டிசைன்களுக்கும் ஏற்றது ஆகும். சிறிய மற்றும் எளிய டிசைன்களின் வெளிக்கோட்டை அழகாக தைக்கப் பயன்படுகிறது. சிறிய புள்ளி வடிவில் உள்ள பேக் ஸ்டிச் (Back stitch) வளைவான டிசைன்கள் தைப்பதற்கு ஏற்றது. கெட்டித்தையல் சிறிய தையலாக தைக்கும் போது தையல் இயந்திரத்தில் தைக்கும் தையல் போல் இருக்கும்.

காம்புத்தையல் (Stem stitch)

காம்புத் தையலானது குறுகிய, வளைவு கோடுகளுக்கு இத்தையல் பெறும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. டிசைனின் வெளிக்கோட்டை தைக்கவும், மற்றும் டிசைன் முழுவதும் மற்ற தையல்களால் நிரப்பி தைத்த பிறகு வெளிக்கோட்டை காம்பு தையலால் தைக்கலாம். அதாவது தாம்பூர் எம்பிராய்டரி டிசைன் முழுவதையும் லைட் கலரில் சங்கிலித் தையலால் நிரப்பி தைத்து டிசைனின் வெளிக்கோட்டை டார்க் கலரினால் காம்புத் தையல் தைக்கலாம். எல்லா வகையாக டிசைன்களின் வெளிக்கோட்டை தைக்கவும் பயன்படுகிறது. காம்பு தையல்கள் சிறிய அளவில் உள்ளன எதிர் திசையில் வளைவு இருக்கும் போது நூல் எப்போதும் கோட்டிற்கு மேலே இருக்கும். இத்தையல் முறுக்கப்பட்ட கயிறு போல் காணப்படும்.

ஹெரிங் போன் தையல் (Harring bone Stitch)

துணியின் மடிந்த விளிம்புகளை ஒன்றாக சேர்த்து தைப்பதற்க்கு பயன்படுகிறது. இத்தையல் ஹாம் கோல் கைகளின் வளைவான (Armhole) ஓரங்களில் தைப்பதால் அழகான தோற்றம் அளிக்கும் அகலமான பார்டர் (Armhole) பெறப்

பயன்படுத்தலாம். இவற்றில் மாறுபட்ட வகைகள் உள்ளன, தையலின் வேலைப்பாடு நெருக்கமாக இருந்தால் குளோசுடு ஹெரிங் போன் தையல் (Clossed Harring bone stitch) என்றும் அதாரத் தையலில் இன்டர் லேஸ் இருந்தால் லேசுடு ஹெரிங் போன் தையல் (Laced herring bone stitch) எனவும் அழைப்பர்.

இத்தையல்கள் வேறுபட்ட வண்ணங்களில் நூல்கள் பயன்படுத்தப்படுகிறது. இத்தையல் கை ஊசியினால் தைக்கும் போது துணிகளின் மேல் lace போல் தைப்பதற்கு கார்டோனட் தையல் (Cardonnet Stitch) என்ற மற்றொரு பெயர் உண்டு.

(Oven herring bone stitch) வோவன் ஹெரிங் போன் தையல்

இத்தையல் இரண்டு இணையாத கோடுகளின் நடுவில் அதாவது டையகனலாக (Diagonal) செய்யப்படுகிறது. துணியின் பின்பக்கம் பார்ப்பதற்க்கு இத்தையல் இணைந்து இரு ரன்னிங் தையல் போல் காணப்படும். (Parrallel Rows) இந்த தையல்கள் நீளமான ஊசிகளான 7,9 எண்கள் கொண்ட ஊசிகள் பயன்படுத்தப்படுகிறது.

Double Horring bone stitch

மற்றொரு வகையான இணைத்தையலாகும். வரையப்பட்ட கோடுகளின் மூலமாக இடது

Fig 1



புறத்திலிருந்து வலது புறமாக தைக்கப்படுகிறது. இது பார்ப்பதற்கு எளிதானதாகவும் ஆழகான தோற்றம் கொண்டதாகவும் உள்ளது. அகலமான பார்டர்களுக்கு விரைவாக தைக்கப்படுகிறது. வேறுபட்ட வண்ண நூல்களை தைப்பதால் அழகான தோற்றம் அளிக்கும்.

Satin Stitch

இத்தையல்கள் ஒரேவிதமாக இணையான கோடுகளில் (Fig 2) நெருக்கமாகவும் மற்றும் சமமாகவும் தைக்கப்படுகிறது. இத்தையல் பார்ப்தற்க்கு சாட்டின் பின் போல் காணப்படும். சாட்டின் ஒரு தட்டையான நிரப்பிப் தைக்கும் தையலாகும். இது எளிமையான தையலாகும். நேர்த்தியாக மற்றும் நல்ல தோற்றத்தை தருகிறது. நல்ல பயிற்சியின் மூலம் தையலை அழகுபடுத்தலாம். மாறுபட்ட திசைகளில் பகுதிகளாகவும் பலவிதமாத டிசைன்கலும் தைக்கப்படுகிறது. ஜியாமென்ரிகல் மற்றும் (geomentical) மற்றும் விலங்குகளின் டிசைன் (Animal design) இயற்கை காட்சிகள் ஆகியவற்றில் வேலைபாடு செய்யப்படுகிறது.

(Satin) சாட்டின் தையல் அனைத்து வகையான துணிகளிலும் எம்பிராய்டரி செய்யப்படுகிறது.

உதாரணம்: லினர், சாட்டின் சில்க், வெல்வேட், கேன்வாஸ்.

Fig 2

SATIN STITCH

EN111011

பெடட் சாட்டின் தையல் (Padded Satin) (Fig 3)

டிசைன்களின் மேல் அவுட் லைன் மற்றும் உள் புறத்தில் ரன்னிங் தையலால் தைத்த பிறகு சாட்டின் செய்யப்படும் போது உயர்ந்த அல்லது எழும்பியது போல் தோற்றம் அளிக்கும் மற்றும் அச்சு போல் (Embossing effect) காணப்படும். அதனால் இந்த தையல்களை எழும்பிய தையல்கள் (Raised Stitch) என அழைப்பர்.

Fig 3



EN111012

லூப் தையல் (Loop stitches)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

- **அடிப்படை கை எம்பிரைாய்ட்டரி பற்றி தெரிந்து கொள்ளுதல்**
- **தையல் பயன்பாடுகளை அறிதல்**
- **அடிப்படை தையல்களுக்கு பொருத்தமான டிசைனை தேர்ந்தெடுத்தல்.**

சங்கிலி தையல் (Loap Stitches): Chain stitch, wheat ear stitch, lazy daisy stitch, Double lazy daisy stitch Button hole stitch, feather stitch fish bone stitch இவை அனைத்து Loop stitch - ன் வகையை சேர்ந்ததாகும்.

Chain stitch இது எம்பிராய்டரி வேலைகளில் பயன்படுத்தப்படும் அழகான தையல்களில் ஒன்றாகும். இந்தியாவின் எல்லா பகுதிகளிலும் பொதுவாக சங்கிலி தையலில் வேலை செய்யப்படுகிறது. ஜாகோபியன் வடிவங்களில் சேடிங்சிங்கிற்கு (Shading) சங்கிலி தையல் தைக்கப்படுகிறது.

சங்கிலி தையலை விம்புடு சங்கிலி, (Whipped) அல்லது லேசுடு சங்கிலி தையலினால் அலங்கரிக்கப்படுகிறது. டிசைனின் (Design) அவுட் லைன் மற்றும் கிளைகள் காம்புகள் போன்றவற்றை பூவேலை செய்யப்பயன்படுகிறது.

சங்கிலி தையல் ஆதாரத் தையல் ஆகும். சங்கிலி தையலின் மாறுபட்ட தையல் கொண்டு பார்டர்களை அலங்கரிக்கவும் நிரப்பித் தைக்கவும் பயன்படுகிறது. ஜிக்ஜாக் செயின் ஸ்டிச் (Zigzag chain stitch), கேபிள் செயின் ஸ்டிச் (Cable Chain stitch) ஸ்லேன்டிங் செயின் (Russia Chain stitch) ரஷ்யன் செயின் ஸ்டிச் லேசி டெய்சி (Laysi daisy) ஓபன் செயின் (Open Chain stitch) போன்றவை மாறுபட்ட தையல் ஆகும்.

அழகிய முனைகள் உள்ள டிசைகளுக்கு சங்கிலி தையல் பொருத்தமாக இருக்கும். காம்புகள் கிளைகள் அழகான இலைகள் போன்றவற்றிற்க்கு சங்கிலி தையல் அவுட் லைன் போட சரியாக இருக்கும். இரண்டு இழைகள் கொண்டு அழகான சங்கிலி தையல் தைக்கப்படுகிறது.

கேபிள் சங்கிலி தையல் (Cable Chain)

இது சங்கிலித் தையலின் மாறுபட்ட தையல் ஆகும். கனமான சங்கிலி போன்று காணப்படும். தையல்களின் இடைவெளி மிகவும் முக்கியம். பெரிய சங்கிலி தையல் உண்டாக்கி தைக்கும் தையல் பார்க்க நன்றாக இருக்கும். ஒரே அளவாக இருப்பதால் சிறப்பாகவும் இருக்கும்.

மெல்லிய பார்டர்கள் தைக்க பொருத்தமாக இருக்கும். அலங்கார தையலாக பயன்படுகிறது. ஸ்மாக்கிங் வேலையிலும் இவைகள் உபயோகப்படுகிறது. மெல்லிய கோடுகளை தைப்பதால் அழகிய தோற்றம் அளிக்கும்.

சிரிய டிசைன் மற்றும் சிம்பிள் டிசைன்களுக்கு கேபிள் செயின் ஸ்டிச் (Cable Chain Stitch) பொருத்தமானதாகும். ஒற்றை வளைந்த வரி (Single Courve) வடிவமைப்புகளுக்கு நேர்த்தியாக இருக்கும் சிம்பிளாகவும் பார்க்க அலங்காரமாகவும் இருக்கும். சுலபமாக விரைவில் தைக்கப்படுகிறது. தடித்த இழைகளை கொண்டு வேலை செய்வதன் மூலம் வசீகரத் தோற்றம் உண்டாகும். டெயில் சங்கிலி (Tail Chain Stitch) தையல் இத்தையல் சிரிய கைக்குட்டைகளும் குழந்தைகளின் ஆடைகளும் தைக்கப் பயன்படுகிறது. தலையணை உரைகளுக்கு இத்தையல் பொருத்தமானதாகும். விரிப்புகளுக்கும் புடவைகலில் உள்ள டிசைன் பூக்கள் மற்றும் இலைகளுக்கும் பொருத்தமானதாக இருக்கும்.

டபுல் லேசி டெய்சி (Double Lazy daisy) இத்தையல் லேசி டெய்சியில் இருந்து மாறுபட்டதாகும். இதில் வேறுபாடு என்ன என்றால் மற்ற இலைகள் மற்றும் பூக்கள் இரு சங்கிலி தையல்களால் செய்யப்பட்டு இருக்கும். ஒன்று உள்பகுதியாகப் அதாவது ஒற்றை சங்கிலி தையல் போட்டு தையலுக்குள் இன்னொரு சங்கிலி தையல் போட வேண்டும் இது பார்ப்பதற்கு நிரப்பி தைக்கப்பட்ட தையல் போல் இருக்கும் ஆகவே இதை (Double lazy daisy Stitch) டபுள் லேசி டெய்சி தையல் என அழைக்கப்படும் (Chain Stitch) சங்கிலி தையல் மாறுபட்ட பல வண்ண நூல்கலால் உபயோகப்படுத்தப்படுவதால் இத்தையல்களைப் பார்க்க கவர்ச்சி கரமாக இருக்கும்.

Fig 1

இறகு தையல் (Feather)

இத்தையல் ஒன்றன்பின் ஒன்று வரிசையாக தைக்கும் போது நிரப்பித் தைக்கும் தையல் போல் காணப்படும். இந்த வகையான தையல்கள் அழகிற்காகவும், அலங்கார தையலுக்காகவும் பயன்படுகிறது. இத்தையல்கள் பெரும்பாலும் துணிகளின் மேல் பூ தண்டுகள் வரைவதற்க்கும் அகலமான பார்டர்களை தைக்கவும் பொருத்தமானதாக இருக்கும்.

இத்தையல் பட்டன் ஹோல் தையலில் உற்பத்தியானதாகும். இதை சிறிது சாய்வான தையலாக மாற்றிட மாறி தைக்க வேண்டும். இடது பக்கத்தில் மற்றும் வலதுபுறத்தில் துணிக்கு வசதியாக ஊசியைக் கொண்டு வந்து எம்பிராய்டரி துணிக்கு மேல் ஒரு வளையத்தை உருவாக்குங்கள் உருவாக்கிய வளையத்தின் மையத்திற்க்கு அருகில் மீண்டும் ஊசியை கொண்டு தைக்க வேண்டும்.

இரட்டை இறகு தையல் (Double Feather Stitch)

இத்தையல்களுக்கு வேறுபட்ட வண்ணங்கள் கொண்ட தடிமனான சுருக்குகள் உள்ள நூல்கள் பயன்படுவதால், குழந்தைகளின் ஆடைகளில் உள்ள பார்டர்கள் காண்பதற்க்கு அழகான தோற்றம் அளிக்கும்.

மீன் முள் தையல் (Fish bone stitch) (Fig 2)

இத்தையல் பார்ப்பதற்க்கு ஹெர்ரிங் போன் தையல் போல் காணப்படும், இவை இறுக்கமான முட்டை வடிவம் கொண்ட இலைகளின் டிசைன்களை தைக்க பயன்படுகிறது. இரண்டு வேறுபட்ட தையகளில் நூல்களால் ஒரு நிறத்தின் நூல் மற்றொரு நூலினால் செய்யப்படுவதால் இது பார்ப்பதற்க்கு மரபலகையின் மீது தையல்கள் உள்ளது போல் தோன்றும் இவை மிக உறுதியாகவும் இருக்கும்.

Fig 2



FISH BONE STITCH

EN110911

பயன்கள்: ஏப்ரன் குழங்களின் ஆடைகள் போன்றவற்றிற்க்கு பயன்படுகிறது. முள், ஆனி போன்றவற்றால் துணிகள் 'ட' வடிவில் கிழிந்து இருந்தால் இரு விளிம்புகளை அதாவது கிழிந்த இடத்தை மீன் முள் தையலினால் இணைக்க பெரிதும் உபயோகப்படுகிறது. (Fig 3)

ருமேனியன் தையல் (Open Roumanian): இதுவும் மீன் முள் தையலின் வகைகை சேர்ந்ததாகும். இது இத்தையல் அகலமான பெரிய டிசைன்களை தைக்க பயன்படுகிறது. துணியின் மடிப்புகளை தவிர்ப்பதற்க்கு துணியில் வேலையில் பயன்படும் பிரேமில் இருக்கமாகவும் நிலையாகவும் வைத்து நடுவில் இலைகள் மலர்களின் டிசைன் தைக்கப்பயன்படுகிறது.

குழந்தைகளின் ஆடைகள், தலையாணை உறைகள் மேகை விரிப்பு மற்றும் புடவைகக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. (Fig 3)

Fig 3



OPEN ROUMANIAN

EN110912

கிராஸ் தையல் (Cross Stitch)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்
- **கிராஸ் தையல் பற்றி விளக்குதல்.**

கிராஸ் தையல் (Cross Stitch) (Fig 1).

Fig 1



CROSS STITCH

EN111311

கிராஸ் ஸ்டிச் என்பது ஒரு வகையான பூவேலை ஆகும். இது அதிகமாக மேட்டி துணியில் (Matty Cloth) தான் பூவேலை செய்யப்படுகிறது. இத்தையல் பார்க்க x குறி போல் இருக்கும்

இத்தையலினால் டிசைன் முழுவதையும் பூவேலை செய்யப்படுகிறது. இத்தையல் துணியில் உள்ள நூல்களை கணக்கிட்டு (Cross Stitch) கிராஸ் தையல் செய்யப்படுகிறது.

சிங்கிள் கிராஸ் ஸ்டிச் (Single Cross Stitch)

இதில் ஒரு Cross தையல் மட்டும் தைக்கப்படுகிறது. இதற்க்கு கான்டினென்டல் தையல் என்ற மற்றொரு பெயர் உண்டு.

ஸ்டார் கிராஸ் ஸ்டிச் (Star Cross Stitch)

இத்தையல் பார்க்க நட்சத்திரம் போல் இருப்பதால் ஸ்டார் கிராஸ் என அழைப்பார். இப்பூவேலை செய்வதற்க்கு நூல் அதிகம் தேவைப்படும். பார்க்க மிக அழகான தோற்றத்தை உண்டாக்கும். இதனை நட்சத்திர தையல் ஒரு படுக்கை குறுக்கு தையல் என அழைப்பார்கள். இது குறுக்கு தையலின் எளிதான மாறுபாடாகும்.

Cross Stitch பயன்படுத்தி தலையணை உறை குஸ்ஷன் கவர் (Cushion cover) படுக்கை விரிப்புகள், மேசை விரிப்புகள் Table Cloth போன்றவற்றை அலங்கரிக்க பயன்படுகிறது.

ஒரு வரிசையில் ஒரே நிறத்தின் பல தையல்கள் முதலில் (/////) உருவாக்கவும் பின்னர் திரும்பிச் சென்று அவற்றை கடந்து (xxxx) இவ்வாறு தைத்து முடிக்கவும். இது நேரத்தை மிச்சப்படுத்தும் மற்றும் முடித்தவுடன் மென்மையான தோற்றத்தையும் கொடுக்கும்.

முடிச்சு தையல் (Knotted Stitch)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

- **முடிச்சு தையல் பற்றி விளக்குதல்.**

ப்ரெஞ் நாட் (French Knat) (Fig 1)

Fig 1



ஊசியினால் நூலை இரண்டு அல்லது மூன்று முறை சுற்றி சிறு முடிச்சு உருவாகின்றது. பூக்களின் நடுவில் மகரந்த தூள் போல் இந்த தையல் முடிச்சு உபயோகப்படுகிறது.

இந்த முடிச்சுகள் நெருக்கமாகவும் பூவேலையில் சேர்த்தும் போட வேண்டும். இதனால் டிசைனின் எல்லா பகுதிகளிலும் நிரப்பப்படுகிறது. இது தடிமனாகவும், கடினமான மற்றும் உயர்த்தப்பட்ட தையல் ஆகும்.

டிசைனின் உள் பகுதியை நிரப்பப்பயன்படுகிறது. நூல் எண்ணிக்கையை அதிகப்படியும் பிரன்சு நாட் தைக்கலாம் மற்றும் அதிக சுற்றுகளையும் உருவாக்கலாம். பெரும்பாலும் பூவின் டிசைன்களை உருவாக்கப்படுகிறது. எல்லாவிதமான நூல்கள் மற்றும் எல்லா விதமான துணிகளிலும் பூவேலை செய்யலாம். பாப்ஸின் துணி, சில்க் துணி, மற்றும் உல்லன் நூல் (Pearl Thread) பேல் நூல், சில்க் நூல்கள் உபயோகப்படுத்தலாம், முக்கியமாக இது போன்ற தையல்கள் குழந்தைகளின் ஆடைகக்கு பூவேலைப்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

ப்ரான்சு நாட் (French Knat) பயிற்சியாளர் ஆரம்பத்தில் பாப்ஸின் துணியில் பயன்படுத்தி பழகினால் நல்ல பலன் தரும்.

புள்ளியன் நாட் (Bullion Knat) (Fig 2)

Fig 2



பிரான் நாட்டின் மாறுபட்ட தையல் ஆகும் ஊசியை கையில் பிடித்துக் 10 அல்லது 12 சுற்றுக்கள் நூலினால் சுற்றுவதன் மூலம் இத்தையல் உருவாகின்றது. நூலினால் சுற்றுகள் சுற்றும் போது இறுக்கமாக இல்லாமல் தளர்வாக இருக்க வேண்டும். இந்த வேலைப்பாடு முடிந்தவும் சுருள் போல் தோற்றம் அளிக்கும் இரண்டு வேவ்வேறு வண்ண நூல்களை பயன்படுத்துவதனால் இந்த தையல்களின் அழகு மிகைப்படுத்தி தோற்றம் அளிக்கும்.

பொதுவாக ரோஜா பூக்களின் டிசைன் போல் அடுக்கடுக்கான பல இதழ் கொண்ட ரோஜா போல் காணப்படும். இத்தையல்கள் புடவை மற்றும் குழந்தைகளின் உடைகள் மற்றும் பல ஆடைகளில் பூ வேலைப்பாட்டிற்க்கு பயன்படுகிறது.

மிரர் வொர்க் (Mirror work)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

- ***மிரர் வொர்க் பற்றி விளக்குதல்***

கண்ணாடி வேலை (Mirror work): இது பஞ்சாபின் அபு பாரத் கண்ணாடி வேலை என்று அழைக்கப்படுகிறது பலவிதமான வடிவங்கள் (Shape) கொண்ட கண்ணாடி பயன்படுத்தப்படுகிறது.

தைக்கும் முறை

(Round Shape) வட்ட வடிவமான கண்ணாடி தைக்கும் போது, கண்ணாடியின் உருவம் மேல் (Out line) வெளிக்கோட்டை வரைந்து, அதன் மேல் சங்கிலித் தையலால் தைத்து. (சங்கிலி தையல் தளர்வாக தைக்க வேண்டும். தையலின் மேல் loop போல் தைக்க வேண்டும்.

கண்ணாடியை சங்கிலி தையலின் உள்ளே வைக்க வேண்டும் பிறகு loop யை இழுக்க வேண்டும். பிறகு இரண்டு அல்லது மூன்ற சுருக்கு பட்டன் ஹோல் தையலால் தைக்க வேண்டும். (Fig 1)

(Diamond Shape) டைமண்டு வடிவம் கண்ணாடியை தைக்கும் முறை.

கண்ணாடி வைத்து Out line போட்டு கொள்ள வேண்டும் அதன் மேல் பெரிய Cross தையலினால் வைத்து பட்டன் ஹோல் தையல் போட வேண்டும். இது பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும்.

(Wall hanging) சுவரில் மாட்டுவது (வால் ஹெங்கிங்) பைகள் (bag), படுக்கை விரிப்புகள் போன்றவற்றை அழகுபடுத்த பயன்படுகிறது.

Fig 1



அலங்கார தையல் (Decorative stitches)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

- ***அலங்கார தையல் பற்றி விளக்குதல்.***

கவுச்சிங் தையல் (Couching stitch) (Fig 1)

கவுச்சிங் தையல் என்பது இணைத்தல் வேலை ஆகும். துணியின் மேல் பரப்பில் டிசைனின் மேல் ஒன்று அல்லது அதிக எண்ணிக்கையிலான நூல்களை கொண்டு இணைத்து பூவேலை செய்யப்படுகிறது. மற்ற தையல்களில் இருந்து வேறுபட்டு இருக்கும். மற்றும் கவுச்சிங் தையல் பார்ப்பதற்க்கு தையல் இயந்திரத்தில் பூவேலை செய்தது போல் தோன்றும், அச்சு தையல்கள் போல் தோற்றம் அளிக்கும்.

Fig 1



COUCHING WORK

EN111211

பெரும்பாலும் (Skein Thread) ஸ்கெயின் நூல் உபயோகப்படுகிறது. துணியை தேர்தெடுக்கும் போது கவனம் தேவை ஏன் எனில் பூ வேலைப்பாடு செய்யப்படுவதற்கு அதிக இடம் தேவைப்படுவதால் லினன் மற்றும் சில்க், நெய்யப்பட்டப்பட்ட துணிகள் போன்ற தடிமனமான துணிகள் பொருத்தமாக இருக்கும். நூல்களில் ஸ்கெயின் (Skein Thread) நூல் ஜரி நூல் மற்றும் (Pearl Thread) பார்ல் நூல் போன்றவை உபயோகப்படுத்தப்படுகிறது. (Fig 2)

டிடாச்டு கவுச்சிங் (Detached Couching)

இத்தையல்கள் கவுச்சிங் வகையை சேர்ந்ததாகும். ஆனால் கவுச்சிங் வேலை போன்றே இல்லாமல் இத்தையல் ஒரே நேரத்தில் ஸ்கெயின் நூலுன் இரண்டு வரிசைகளில் (Two Rows) தைக்கப்படுகிறது. துணியில் அதிக பரப்பளவில் தைக்கப்படுவதனால் கடினமான துணிகள் வெல்வெட், பட்டு போன்றவை பயன்படுத்தப்படுகிறது.

Fig 2



DETACHED COUCHING

EN111212

பூவேலை செய்யும் போது பொருத்தமான ஊசிகளை தேர்ந்தெடுக்க வேண்டும். கார்பெட், மேஜை விரிப்பு, தலையணை உறை படுக்கை விரிப்பு போன்றவற்றிற்க்கு ஜரிகை நூல்களை பயன்படுத்துவதனால் மேலும் தையல்களின் அழகு மிகை படுத்தப்படுகிறது.

வடிவமைப்பின் கூறுகள் மற்றும் வடிவமைப்பின் ஆதாரங்கள் (Elements of design sources of design)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

- **வடிவமைத்தலை விவரித்தல்**
- **வடிவமைத்தலின் மூலப் பொருளும் அதன் மூலக் கோட்பாடு முறைகளையும் விவரித்தல்**
- **ஆடைகளின் வடிவமைப்பை விவரித்தல்**
- **ஆடைக்கு வடிவமைப்பை தேர்ந்தெடுத்தல்.**

வடிவமைத்தலின் மூலப்பொருளை விவரித்தல் (Definition of Elements of design)

காட்சி வடிமைப்போ அல்லது கலை வேலைப்பாடுகளிலோ ஒருங்கிணைந்து தனிப்பட்ட பகுதியின் வரையறுத்த கோட்பாடுகளை கூறுவதே ஒரு வடிவமைப்பின் முக்கிய அமைப்பாக உள்ளது. அவ்வகையான வடிவமைப்பு பல்வேறு செய்திகளை தன்னுள் அடக்கியதாக இருக்கும்.

கோடுகளின் திசைகள் (Direction of Lines) (Fig 1)

Fig 1



செங்குத்து கோடுகள் (Veotical Lines)

இவ்வகை கோடுகள் மேன்மையான ஆன்மிகத்தின் உணர்வை வெளிப்படுத்துவதாக உள்ளது.

கிடைமட்ட கோடுகள் (Horizontal Lines)

இவ்வகை கோடுகள் அமைதியான, சாந்தமான, ஒய்வான உணர்வை வெளிப்படுத்துவதாக உள்ளது.

மூலைவிட்ட கோடுகள் (Diagonal Lines)

மூலைவிட்ட கோடுகள் இயக்கம் அல்லது திசையின் உடையில் பரிந்துரைக்கின்றன மூலைவிட்ட நிலையில் உள்ள பொருள்கள் ஈர்ப்பு தொடர்பாக நிலையற்றவை என்பதால் வேகத்தின் உணர்வை வெளிப்படுத்துவதாக உள்ளது.

வளைவு கோடுகள் (Curve Lines)

வளைவு கோடுகள் அர்த்தத்தில் வேறுபடுகின்றன அவை ஆறுதல், பாதுகாப்பு, பரிச்சயம், தளர்வு ஆகியவற்றை குறிக்கின்றன. அவை மனித உடலின் வளைவுகளை நினைவுபடுத்துகின்றன. எனவே ஒரு மகிழ்ச்சியான குணத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.

வடிவங்கள் (Shapes)

வடிவங்களை வரியால் உருவாக்கலாம். வண்ணம் மற்றும் அதன் விளிம்புகளை கொண்டு அதன் மதிப்பில் மாற்றத்தை உருவாக்கலாம். ஒரு வடிவமைப்பின் அசாத்தியமான உயர்வு, அளவுகள் மற்றும் கோடுகள், வளைவுகளின் மாறுபாடு வெவ்வேறு வகையான வடிவங்களை உருவாக்குகின்றன. உதாரணமாக சதுரம், செவ்வகம், முக்கோணம், ஓவல், வட்டம் ஆகியவை ஃபேஷன் ஸ்கெட்சில் பயன்படுத்தப்படும்.

நேச்சுரல் டிசைன் (Natural Design)

இயற்கை வடிவங்கள் இயற்கையில் காணப்படுகின்றன அல்லது அவை மனிதனால் உருவாக்கப்பட்ட வடிவங்களாக இருக்கலாம். இலைகள், பூக்கள், மை குமிழ் (Ink Blob) போன்றவை இயற்கை வடிவத்திற்கு எடுத்துக்காட்டாகும் பெரும்பாலும் இயற்கை வடிவங்கள் ஒழுங்கற்றவை, இயற்கை வடிவங்கள் ஆர்வத்தை தூண்டுவதாகவும் அந்த வடிவத்தில் உள்ள கருப்பொருளை வலுப்படுத்துவதாகவும் உள்ளது.

ஸ்டைலிஸ்ட் டிசைன் (Stylized Design) (Fig 2)

இயற்கையான வடிவங்களை நவநாகரிகமான முறையில் சிறிய மாற்றங்களை கொண்ட வடிவமைப்புக்கு ஸ்டைலிஸ்ட் டிசைன் (Stylized Design) என்று பெயர். நமக்கு பரிச்சயமில்லாத மொழியில் ஒரு வாசகம் இருந்தாலும்

Fig 2

FAD901T1002

உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட கருத்தியல் வடிவங்களை அது கூற வரும் செய்தியை நாம் புரிந்து கொள்ளலாம். உதாரணம் ஆண், பெண் ஓய்வறை ஸிம்பல்ஸ் (Symbols)

ஜியோமெட்ரிக் டிசைன் (Geomatric Design) (Fig 3)

சதுரம், செவ்வகம், வட்டம், முக்கோணம் போன்ற அடிப்படை வடிவங்களால் இன்னும் சில ஜியோமெட்ரிக் வடிவங்கள் உள்ளன. அதில் குறிப்பாக மதசார்புடைய வடிவங்கம் உண்டு.

Fig 3



FAD901T1003

அப்ஸ்ட்ரக்ட் டிசைன் (Abstract Design) (Fig 4)

Fig 4

FAD901T1004

இயற்கையான வடிவத்தை நாகரிகமான அல்லது எளிமையான வடிவத்திற்கு மாற்றி அமைப்பது அப்ஸ்ட்ரேக்ட் டிசைன் என்று பெயர் இதற்கு உதாரணமாக மாற்று திறனாளிகக்கான இடம் என்பதை ஒரு ஸ்டைலிஸ்ட் வீல் சேரின் வடிவத்தை கொண்டு நமக்கு உணர்த்துவதை சொல்லலாம்.

இல்யுஷன் (illusion) (Fig 5)

இல்யுஷன் (illusion) என்பது உரு திரிவு ஆகும். மனித உணர்வுகளை காட்டிலும் காட்சி மாயைகள் நன்கு அறியப்பட்டவை. பார்வை பெரும்பாலும் மற்ற புலன்களில் ஆதிக்கம் செலுத்துகிறது.

Fig 5

FAD901T1005

ஸ்பேஸ் (Space) (Fig 6)

ஒரு வடிவத்தை சுற்றியுள்ள காலியிடத்திற்கு நொடிப் ஸ்பேஸ் என்றும் அந்த வடிவம் இடம்பெற்றுள்ள இடத்தை பாஸிட்டிங் ஸ்பேஸ் என்றும் கூறுவர். வடிவமைப்பவர் பாஸிடிவ் ஸ்பேஸ்க்கு கொடுத்த முக்கியத்துவத்தை நெகடிவ் ஸ்பேஸ்க்கும் கொடுக்க வேண்டும் சில சமயங்களில் பாஸிடிவ், நெகடிவ் என்று பிரிக்காத வண்ணம் டிசைன் செய்தும் இருப்பர்.

Fig 6



FAD901T1006

நம் சுற்றுச் சூழலில் பொதுவாக பொருள்கள் தொலைவில் இருக்கும்போது சிறியதாகவும் அருகில் இருக்கும்போது பெரியதாகவும்

தோன்றும் அதை டிசைனில் காண்பிப்பதற்கான எளிதான வழி பொருட்களின் அளவை வேறுபடுத்துவதாகும். (Fig 7)

Fig 7



FAD901T1007

டெக்ஸ்டர் (Texture)

டெக்ஸ்டர் என்பது ஒரு பொருளின் தரம், இதை நாம் தொட்டு உணரக்கூடியதன் மூலமும் நாம் கண்களால் பார்த்தும் அறிய முடியும். அனைத்து மேற்பரப்புகளையும் அமைப்பின் அடிப்படையில் விவரிக்க முடியும். வடிவமைப்பாளர்கள் தங்கள் வேலையின் அமைப்பு ஒரு மேலாதிக்க கூறுகளாக பயன்படுத்துகிறார்கள் இது குறிப்பாக உலோகம், மரம் மற்றும் கண்ணாடி போன்ற கைவினை ஊடகங்களில் தெளிவாக தெரியும் ஏனெனில் அங்கு பொருளின் தொட்டுரைக்கூடிய குணம் ஒரு முக்கிய அம்சமாகும்.

கலர், வேல்யூ மற்றும் ஹியூ (Colour, value and Hue) (Fig 8)

Fig 8



FAD901T1008

வண்ணங்கள் பொருளில் மிகவும் சக்தி வாய்ந்த ஒன்றாகும். இது மிகப்பெரிய வெளிப்பாட்டு குணங்களை கொண்டுள்ளது. வண்ணத்தின் பயன்பாடுகளை புரிந்து கொள்வது வடிவமைப்புக்கு முக்கியமான ஒன்றாகும். வண்ணம் என்ற சொல் சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், பச்சை, நீலம், வயலட், கருப்பு மற்றும் வெள்ளை மற்றும் அதற்கு சாத்தியமான அனைத்து சேர்க்கைகக்கும் பொருந்தும் பொதுவான சொல்லாகும். எந்தவொரு நிறமும் அதன் மதிப்பு மற்றும் சாயல் ஆகியவற்றை குறிக்கும். இதுவன்றி உடல் நிகழ்வுகள் மற்றும் உளவியல் விளைவுகள் இணைந்து ஒரு வண்ணத்தைப் பற்றிய நமது உணர்வை பிரதிபலிக்கின்றன. சிவப்பு, மஞ்சள் மற்றும் நீலம் ஆகிய 3 முதன்மை வண்ணங்களின் கலவையில் முடிவில்லாத பல்வேறு வண்ணங்கள் கிடைக்கின்றன அவை வடிவமைப்பிற்கு முக்கியமானதாகும்.

ஆரஞ்சு, பச்சை மற்றும் ஊதா ஆகிய மூன்றும் இரண்டாம் வண்ணங்கள் ஆகும் (Secondary Colours) ஏதேனும் இரண்டு முதன்மை வண்ணங்களின் (Primary Colours) கலவையில் இரண்டாம் வண்ணம் உருவாகிறது முதன்மை வண்ணங்களின் அளவை மாற்றுவதன் மூலம் பல வண்ணங்களை உருவாக்க முடியும். வண்ணத்தில் வெப்பத்தை குறிக்கும் வண்ணம் சிவப்பு மற்றும் ஆரஞ்சு ஆகும். வெதுவெதுப்பான (warm) உணர்வை உதாரணமாக சூரியன் அல்லது பாலைவனம் பிரதிபலிப்பதாக உள்ளது. குளிரான வண்ணங்கள் (Cooler Colours) நீளம், ப்ளூ (Blue) மற்றும் கிரீன் (Green) ஆகும். இவை தண்ணீர் மற்றும் பனியை பிரதிபலிக்கும் உணர்வாக உள்ளது.

நிறத்தின் தீவிரம் (Intencity) என்பது அந்நிறத்தின் வலிமையும் தூய்மையும் ஆகும். சாயல் (Hue) என்பது ஒரு நிறத்தை மற்றொரு நிறத்திலிருந்து பிரிக்கும் குணம் ஆகும். டோன் மதிப்பு (Tone Value) என்பது ஒரு நிறத்தின் ஒளி அல்லது இருளின் அளவு ஆகும் மஞ்சள் ஒளி மிகுந்தது (Bright Colours), நீலம் இருண்டது (Dark Colours), ஒரு நிறத்தில் வெள்ளை நிறத்தை சேர்ப்பதன் மூலம் (டின்ட்) Tints நிறங்கள் செய்யப்படுகிறது. ஒரு நிறத்தில் கருப்பு நிறத்தை சேர்ப்பதன் மூலம் ஷேட்ஸ் (Shades) உருவாக்கப்படுகின்றன.

வடிவமைப்பின் கோட்பாடுகள் (Principles of Design)

ஹார்மனி (Harmony)

ஹார்மனி என்பது செல் என்று பொருள், பொருள்கள் ஒன்றாகக் காண கண் பயன்படுததப்படும் இடத்தில் நல்லிணக்கத்தை உருவாக்க முடியும் அதனையே ஹார்மனி என்று

பெயர் (எ.கா) பூச்சாடியில் உள்ள தாவரங்கள் (Fig 9) சோலார் சிஸ்டம்.

Fig 9

FAD901T1009

மேலும் ஹார்மணியானது உணர்வுகளை உருவாக்கவும் மற்றும் ஒத்த கூறுகளையும் அமைதியையும் மகிழ்ச்சியையும் தோற்றுவிக்கும் படியும் உள்ளது (எ.கா) நீலம் மற்றும் பச்சை செவ்வகம் மற்றும் சதுரம் போன்றவை ஆனால் எதிர்மறையான பொருட்கள் ஆற்றல், உற்சாகம், கோபம், அழுத்தத்தை உருவாக்கும் (எ.கா) முக்கோணத்தில் வட்டமும் சதுரமும் இருத்தல்

எம்பளிஸ் (Emphasis) (Fig 10)

Fig 10



FAD901T1010

வலியுறுத்தல் என்பது பார்வையாளர்களின் கவனத்தை ஈர்க்கும் வடிவமைப்பின் ஒரு பகுதியாகும். வழக்கமாக கலைஞர் ஒரு பகுதியை மற்ற பகுதிகளுடன் ஒப்பிடுவதன் மூலம் தனித்து நிற்க செய்வார். (உ.ம் அளவு, கலர், டெக்ஸ்டர், ஷேப்)

பேலன்ஸ் (Balance)

பேலன்ஸ் என்பது கலை வேலைப்பாடுகளில் பொருள்களை பகிர்வதாகும். நம் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் மூலக்கூறுகளின் அமைப்பை கட்டுப்படுத்துவது பேலன்ஸ் எனப்படும். சமமாகவோ அல்லது சமமற்றதாகவோ வடிவமைப்பின் சிறப்பை பரவச்செய்து கவனத்தை ஈர்க்கும் வண்ணம் அமைத்தல் வேண்டும். இந்த கலை வடிவமைப்பானது குழப்பமில்லாமல் சீரான வடிவமைப்பாக இருக்க வேண்டும்.

1 பேலன்ஸ் ஸிமிட்ரிகல் (சமச்சீர்) அல்லது அஸிம்பிட்ரிக்கல் (சமச்சீரற்ற) ஆகவோ இருக்கலாம்.

2 பேலன்ஸ் உயிரோட்டம், அமைதி, பதற்றம் போன்ற உணர்வுகளை உருவாக்கும்.

3 மூலக்கூறுகளை செங்குத்தாகவோ. கிடைமட்டமாகவோ அல்லது முலை விட்டத்திலோ பேலன்ஸ் ஆக அமையலாம்.

இம்பேலன்ஸ் / அஸிமிட்ரிக்கல் பேலன்ஸ் / இன்பார்மல் பேலன்ஸ் (Imbalance / Asymmetsicial balance / informal balance (Fig 11)

Fig 11



FAD901T1011

வடிவமைப்பில் ஸிமிட்ரிக்கல் பேலன்ஸை விட அஸிமிண்ட்ரிக்கல் பேலன்ஸானது நம் ஆர்வத்தை அதிகப்படுத்தும் வண்ணம் இருக்கும்.

ப்ரோபர்ஷன் (Proportion) (Fig 12)

Fig 12



FAD901T1012

ஒரு வடிவமைப்பில் அனைத்து பாகங்களும் ஒன்றுடன் ஒன்று ஒருங்கிணைந்து செல்லும் உணர்வை ஏற்படுத்துவது ப்ரோபர்ஷன் எனப்படும் (அளவு, எண்ணிக்கை) மனித உருவத்தை வரையும் போது தலையின் அளவை பொறுத்து உடலின் மற்ற பாகங்கள் ஒப்பிடப்படுகிறது.

அளவு மற்றும் அளவீடுக்கிடையேயான தொடர்பை ப்ரோபர்ஷன் உள்ளடக்கியுள்ளது.

ப்ரோபர்ஷன் என்பது யதார்த்தம் மற்றும் விகிதத்திற்கு இடையேயான உறவாகும். ஒரு எடுத்துக்காட்டுக்கு சிறந்த மனித உருவத்தின் விகிதமானது எட்டு தலைகள் உயரமும் தோள்கள் இரண்டு தலைகள் அகலமும் கொண்டவை. ஆனால் இதையே கலைஞர்கள் நகைச்சுவை உணர்வுக்காக யதார்த்தம் மற்றும் விகிதத்திற்கு இடையேயான உறவை மாற்றலாம், அல்லது ஒரு அம்சம் அல்லது தாக்கத்தை வலியுறுத்தலாம் கார்ட்டூன்களில் தலை மற்றும் கைகள் யதார்த்தமான அளவிற்கு அப்பால் விரிவாக்குவதன் மூலம் வலியுறுத்தப்படுகின்றன. எனவே கலைஞர்கள் உணர்ச்சிகளை பரிந்துரைக்க அல்ல ஒரு பொருளின் நிலையை பாதிக்க சாதாரண விகிதாச்சாரத்தை பயன்படுத்தலாம்.

ரிதம் (Rhythm): ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கூறுகள் மீண்டும் மீண்டும் பயன்படுத்தும் போது ரிதம் உருவாக்கப்படுகிறது. பார்வையாளரின் கலைப்படைப்பை சுற்றி நகர்த்துவதற்கு ரிதம் அவசியம். ரிதம் இசை அல்லது நடனம் கேட்கும் அல்லது பார்க்கும் மனநிலையை உருவாக்கிறது.

ரிதம் த்ரூ லைன்ஸ் (Rhythm through lines) (Fig 13)

Fig 13

ரிதம் என்பது நம் பார்வை நகரும் வீதத்தை பற்றியது இசையை ஒத்த வழியில் நகர்த்துவது போல நம் பார்வையானது ஒரு மூலக் கூறிலிருந்து இன்னொரு வழியில் நம் பார்வையை நகர்த்துகிறது அல்லது தாவுகிறது.

ரிதம் த்ரூ க்ரேடேஷன் (Rhythm through Gradation) (Fig 14)

Fig 14

வடிவத்தின் மூலக்கூறுகள் சிறியதாகவோ அல்லது பெரியதாகவோ மாறும் போது அங்கு ரிதம் கிரேடேஷன் (gradation) வடிவத்தில் இருக்கலாம்.

ரிதம் த்ரூ ப்ரோக்ரெஷன் (Rhythm through Progression) (Fig 15)

Fig 15



எந்தவொரு வடிவமைப்புகளின் அளவு, நிறம் அல்லது வடிவத்தால் மீண்டும் மீண்டும் மாறி மாறி இருக்கும் போது அதுவே தொடர்முறை நிகழ்ச்சி (Progression) அல்லது (Rhythm through Progression) என்றழைக்கப்படுகிறது.

ரிதம் த்ரூ ரிப்பிடிஷன் (Rhythm through Repetition)

ஒன்று அல்லது இணைக்கப்பட்ட சரித்திர கூறுகளை மறுபடியும் மறுபடியும் ரிபீடிஷன் முறையில் ரிதத்தை பயன்படுத்துவதை ரிதம் த்ரூ ரிபீடிஷன் என்கிறோம். எடுத்துகாட்டாக ஒரே மாதிரியான வடிவங்கள், வண்ணங்கள் அல்லது கோடுகளை ஒன்றுக்கு மேற்பட்ட முறை பயன்படுத்துதல்.

யூனிட்டி (Unity) (Fig 16)

Fig 16

ஒரு கலைப் படைப்பின் பல்வேறு கூறுகளை ஒன்றாக இணைக்க வேண்டியதன் அவசியத்தை ஒற்றுமை (Unity) வலியுறுத்துகிறது. ஒற்றுமை என்பது ஒரு பக்கத்தின் கூறுகள் எவ்வாறு

ஒன்றிணைகின்றன மற்றும் ஒன்றுக்கொன்று எவ்வாறு தொடர்பானது என்பதை குறிக்கிறது. யூனிட்டி என்பது கலையின் ஒருங்கிணைந்த வேலையை முதலில் முழுவதையும் பின்னர் அதன் பகுதிகளின் கூட்டு தொகையையும் குறிக்கிறது.

யூனிட்டியை அடைவதற்கான வழிகள் (Ways to Achieve Unity)

ப்ராக்ஸிமிட்டி (Proximity)

ப்ராக்ஸிமிட்டி என்பது பொருள்களை ஒன்றாக சேர்ப்பதற்கான எளிய முறை ஆகும். இது ஒரு வடிவத்தின் ஒற்றுமையை ஊக்குவிக்க பெரும்பாலும் பயன்படுத்தப்படும்.

ரிப்பிட்டிஷன் (Repetition)

இம்முறையில் ஒரு படைப்பை ஒன்றாக இணைக்க வண்ணம், வடிவம், அமைப்பு ஆகியவற்றை மறுபடியும் மறுபடியும் பயன்படுத்துவதாகும்.

கன்டினியுஷன் (Continuation)

இம்முறை மிகவும் நுட்பமான முறையாகும் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு வரி, விரிம்பு அல்லது திசையை தொடர்வதை குறிக்கின்றது.

வரையும் கருவிகள் மற்றும் பலவகையான கோடுகள் (Drawing tools and different types of lines)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்
- **வரைவதற்கு தேவைப்படும் கருவிகளை பயன்படுத்தும் முறையை விவரித்தல்**
- **வரைவதற்கான தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கையை விவரித்தல்**
- **வடிவமைப்பில் (design) பயன்படுத்தப்படும் கோடுகளை பற்றி விவரித்தல்.**

பென்சில் (Pencil)

பென்சில் எழுதப் பயன்படுத்தப்படும் கருவி மட்டுமல்லாது வரையவும் பயன்படுத்தப்படுகிறது. இது பாதுகாப்பு உரைக்குள் ஒரு குறுகிய திட நிறமி மையத்தைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த மேலுறை கூர் உடைபடாமல் இருக்கப் பயன்படுகிறது.

ஸ்கேல் (Scale)

தொழில்நுட்ப வரைபடங்களை உருவாக்குவதற்கு இந்தக் கருவி பயன்படுகிறது.

பென்சிலால் வரைதல் மற்றும் குறியீடுகளை குறித்தல் (Pencil drawing and mark making (Fig 1)

(Fig 1)

FAD901T0114

இந்த பாடத்தில், நாம் மார்க் மேக்கிங்க் (Mark Making)ன் முக்கியத்துவத்தை காணப்போகிறோம். மார்க் மேக்கிங் (Mark Making) என்பது காகிதத்தில் பென்சிலைப் பயன்படுத்துவதற்கான செயல் முறையை விவரிக்கிறது உங்கள் பென்சிலை கருத்தில் கொள்வதன் மூலம், பென்சிலில் வரைதல் திறனை மேம்படுத்துவதோடு, அது காகிதத்தில் எவ்வாறு உருவாக்கம் பெருகிறது என்பதை தெரிந்து கொள்ள முடியும்.

சாதாரண பென்சில் கொண்டு ஷேட் (Shade) செய்தல் (Shading wik normal pencil)

மார்க் (Mark) செய்யும் போது பென்சிலை கட்டுப்படுத்தி ஷேட் (Shade) செய்வது ஒரு கலைஞராக வளர முக்கியமான படியாகும்.

கலர் பென்சில் (Colour Pencil) (Fig 2)

(Fig 2)



FAD901T0115

இது வரைபடங்களில் பயனுள்ளதாக இருக்கும் சில அடிப்படை வண்ண பென்சில் ஸ்ட்ரோக்கை (Strokes) அறிமுகப்படுத்துகிறது. ஒரு வரைபடத்தை முயற்சிக்கும் முன் வண்ண பென்சில் கொண்டு ஒரு மேலோட்டமான வரைபடத்தை வரையவும். இது ஒரு சிறந்த முறையாகும்.

கிராஃபைட் பென்சிலில் (Graphite Pencil) உள்ளது போல, கலர் பென்சிலைக் கொண்டும் பல தரப்பட்ட நுட்பமான வேலைகளை செய்ய இயலும். நீங்கள் எதை தேர்வு செய்கிறீர்கள் என்பது நீங்கள் அடைய விரும்பும் இறுதி விளைவைப் பொறுத்தது.

ஷேடிங் (Shading)

நேர்முகமான ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு கலர் பென்சில் கொண்டு ஒரே சமமாக வண்ணம் தீட்டப்படுகிறது லேசாக ஷேட் (Shade) நீங்கள் செய்வதின் மூலம் மிகவும் மங்கலான அளவு நிறமியை பெற இயலும்.

ஹேச்சிங் (Hatching)

விரைவான, வழக்கமான, சமமான இடைவெளி கொண்ட கோடுகள் வரைகையில் சிறிது காகிதத்தின் வெண்பகுதி தெரியும் வண்ணம் அல்லது ஷேடிங்கின் (Shading) கீழ் வண்ணங்கள் தென்படுவது ஆகும்.

க்ராஸ் ஹேச்சிங் (Cross Hatching)

ஹேட்சிங் செங்கோண முறையில் அமைதல். இது பல வண்ணங்களை கொண்டோ, அல்லது பல லேயர்களை (layer) கொண்டோ ஒரு (texture) டெக்ஸ்ஸர் போன்ற தோற்றத்தை உருவாக்க பயன்படுகிறது.

ஸ்கரம்பில்லிங் (Scrumbling) (Fig 3)

(Fig 3)



FAD901T0116

பிரில்லோ பேட் (Brillo pad Scrub) போன்ற சுருள் சுருள் அமைப்புடையது முறையில் சிறிய வட்டங்களை ஒன்றன் மேல் ஒன்றாக வரைதல். அதே முறையை மீண்டும் வேறு வண்ணங்களை கொண்டு பின்பற்றவும்.

டைரெக்ஸனல் மார்க்ஸ் (Directional Marks)

உருவத்திற்கு ஏற்றார் போல் கோடுகளை ஒரு திசையாக வரைதல், அதாவது கூந்தல் (Hair), புல் போன்றவற்றை வரைதல். இது மிகவும் நெருக்கமாக இடுவதன் மூலம் சிறந்த டெக்ஸ்சர் எஃபக்டை (Texture effect) பெற முடியும்.

இன்சிஸ்ட் மார்க் (Incised Mark)

இரண்டு தடிமனான (Wax crayon, oil pastel) வண்ணங்களை ஒன்றன் மேல் ஒன்றாக தீட்டி, அதன் மேல் ஒரு பிளேட் அல்லது ஊசி போன்றவற்றை பயன்படுத்தி ஸ்க்ரேச் (Scratch) செய்யவும். அப்பொழுது கீழ் உள்ள வண்ணம் காணப்படும்.

பர்ணிஸ்ஸிங் (Burnishing)

பர்ணிஸ்ஸிங் என்பது கலர் பென்சில் கொண்டு மிகுந்த அழுத்தத்துடன் வண்ணம் தீட்டுதல், அதாவது காகிதமானது ஒரு பளபளப்பு நிலையை அடையும் வண்ணம் தீட்டுதல். சாதாரண வண்ணம் தீட்டுதலை விட இது பளபளப்பான தோற்றத்தை காட்டும் இது போன்ற முறைக்கு, வாட்டர் கலரை (Water colour) காட்டிலும் குறிப்பாக மெழுகு கலர் பென்சிலை பயன்படுத்துவதன் மூலம் சற்று தெளிவான நகை போன்ற தன்மையை அடைய முடியும்.

வரைவதற்குரிய முன்னெச்சரிக்கை குறிப்புகள் (Standard Preccution for drawing)

- வரைவதற்கு முன்பு பென்சிலை கூர்மைபடுத்தவும்.
- கச்சிதமான வரைபடத்தை பெற, அதை பற்றிய தெளிவான வியுகத்தை ஏற்படுத்திக் கொள்ளவும்.
- வரையும் போது அந்த ஷீட் (Sheet) விளகாமல் இருக்க அதனடியில் ஒரு சப்போர்டை (Support) பலகை பயன்படுத்தவும்
- பிரான்டட் (Branded) பென்சில்களை பயன்படுத்துவதன் மூலம் நுணிகள் உடைவதை தவிர்க்க முடியும்.

அடிப்படை வரையும் நுட்பங்களை அறிந்து கொள்ளுதல்:

வரைதல் என்பது காட்சி சார்ந்த வடிவாகும், இதில் 2 பரிமான வரைபடங்களை வரையும் பொழுது பல வரைபடக் கருவிகளை பயன்படுத்தப்படுகிறது.

கிரஃபைட் பென்சில் (Graphite Pencil) பென் (Pen) மற்றும் மை, மெழுகு கலர் பென்சில்கள், கரிகோல், ச்சாக் (Chalk), பாஸ்டெல்ஸ் (Pastels) ஏரேஸர் (Eraser) மார்க்கர் (Marker), ஸ்டைலுஸஸ் (Styluses) மற்றும் பல உலோகங்கள் (சில்வர்) போன்றவை பயன்படுத்தப்படுகிறது. வரையும் பயிற்சி மேற்கொள்பவரும். அதில்

வேலைபாடுகள் செய்பவரையும் டிராஃப்ட்ஸ்மேன் (Draftsman) அல்லது டிராட்ஸ்மேன் (Draughtsman) என்றும் அழைக்கப்படுகின்றனர்.

வரைவதை எளிதாக்க கார்ட்போர்ட் (cardboard), பிளாஸ்டிக் (Plastic), லெதர் (Leather), கான்வாஸ் (Canvas) மற்றும் இதர பலகைகளை பயன்படுத்திக்கொள்ளலாம்.

தற்காலிக வரைபடங்களை கரும்பலகைகளிலோ அல்லது வெள்ளைப்பலகைகளிலோ அல்லது வேறு ஏதேனும் ஒன்றில் வரையப்படுகிறது.

வரைதலில் உருவம் வரைதல், பொம்மை வரைதல் மற்றும் ஷேடிங் (Shading) போன்ற பல பிரிவுகள் உண்டு. இதனுடன் வரைதலில் பல முறைகள் உண்டு. அவை கோடு வரைதல், புள்ளி ஓவியம், ஷேடிங் (Shading) முதலியன உள்ளடங்கியுள்ளது (Fig 4).

(Fig 4)



FAD901T0301

“கோடு” என்பது அடிப்படை வடிவமைப்பாகும். ஒரு கோட்டிற்கு நீலம், அகலம், வண்ண நயம் (Tone) மற்றும் இழை நயம் (texture) போன்ற அனைத்தும் உண்டு. அது இடைவெளியீட்டை உண்டாக்கவும், ஒரு வடிவத்தை விவரிக்கவும், எல்லைக்கோட்டை விவரிக்கவும் மற்றும் திசையை குறிக்கவும் பயன்படுகிறது.

ஷேடிங் மற்றும் லைட்டிங் (Shading & Lighting)

ஷேடிங் என்பது 3D மாடல்கள் அல்லது விளக்கப்படங்களில் ஆழமான உணர்வை சித்தரிப்பதைக் குறிக்கிறது. ஷேடிங் என்பது வரைபடங்களில் வண்ணத்தின் அடர்த்தியை கூறிப்பதாகும், அதாவது இருண்ட பகுதிகளுக்கு இலகுவான ஷேடிங்கும் (Shading) இடுவதாகும். (Fig 5)

ஷேடிங் (Shading) ஒரு 3D மாதிரியின் வண்ணங்களை ஒளி மூல அல்லது ஒளி மூலங்கக்கு மாற்றியமைக்கிறது. கீழேயுள்ள முதல் படத்தில் பெட்டியின் முகங்கள் ஒரே வண்ணத்தில் காண்பிக்கப்பட்டுள்ளன. எட்ஜ் (edge) கோடுகள் இங்கே காண்பிக்கப்பட்டுள்ளன, இது படத்தை எளிதாகக் காணப் பயன்படுகிறது.

(Fig 5)



FAD901T0302

இரண்டாவது படத்தில், விளிம்பில் கோடுகள் இல்லாமல் இருப்பதால் பெட்டியின் ஒரு முகம் எங்கே முடிவடைகிறது அடுத்து எங்கு தொடங்குகிறது என்று அறிவது கடினம்.

மூன்றாவது படத்தில் ஷேடிங் (Shading) செய்யப்பட்டுள்ளது. இது அப்படத்தை உயிரோட்டமாகவும், எந்த முகம் என்பதையும் எளிதாகக்காட்டுகிறது. (Fig 6)

(Fig 6)

Rendered image of a box. This image has no shading on its faces, but uses edge linesto separate the faces. | This is the same image with the edge lines removed. | This is the same image rendered with shading of the faces to alter the colors of the 3 faces based on their angle to the light sources.

FAD901T0303

ஒளியமைப்பு (Lighting) (Fig 7)

(Fig 7)



SHADING EFFECTS FROM FLOOD LIGHT

FAD901T0304

ஷேடிங், ஒளியமைப்பைச் சார்ந்தது. ஒரு காட்சித்திரையை உருப்படுத்த பல வகையான ஒளிநுட்பங்கள் பயன்படுத்தப்படுகிறது. பல வகையான ஒளி மூலகாரணங்கள் பலவிதமான ஒளியமைப்பிற்கு பயன்படுத்தப்படுகிறது.

கோடுகளை வரைதல் (Drawing lines)

கோடுகளை வரைவதும் மற்றும் வண்ணங்கள் தீட்டுவதும் ஸ்கெச்சிங் (Sketching)ன் ஒரு முக்கிய படிகளாகும். தொடர்ச்சியான பயிற்சி மேற்கொள்வதன் மூலம் மாணாக்கர்கள் கோடுகள் மற்றும் வளைவுகள் வரைவதில் தன்னம்பிக்கை ஏற்படுத்துகிறது.

கோடுகளின் வகைகல்

கிடைமட்ட கோடுகள் (Horizontal lines)

செங்குத்தான கோடுகள் (Vertical lines)

வளைவான கோடுகள் (Curved lines)

சாய்வான கோடுகள் (Diagonal lines)

கிடைமட்ட கோடுகள் (Horizontal lines)

இம்மாதிரியான கோடுகள் ஆடையின் அகலத்தைக்கூட்டி உயரத்தை குறைக்கும். (எ,டு) அகலமான வேற்று வண்ண பெல்ட் (belt) ஒரு உருவத்தின் உயரத்தை குறைத்துக்காட்டும். அதாவது ஆடையை இரு பாகங்களாக பிரித்துக்காட்டும். ஆனால் ஆடையின் நிறத்திற்கே பெல்ட் இருப்பின் அவ்வாறாக தெரியாது. இது உயரமான மனிதரை உயரம் குறைவாக காட்டும்.

செங்குத்தான கோடுகள் (Vertical lines)

இம்மாதிரியான கோடுகள் ஆடையின் உயரத்தை கூட்டியும், அகலத்தை குறைத்தும் காட்டும். ஆடையின் முன்பக்கத்திலோ அல்லது தோள்பட்டையிலிருந்து கழுத்து வரையிலோ வேற்று வண்ண பேன்ட் (Band)களை பயன்படுத்துவதன் மூலம் உயரத்தை குறைத்துக்காட்டும். இது உயரம் குறைவான நபரை உயரமாகக்காட்டும்.

சாய்வான கோடுகள் (diagonal lines)

கோட்டின் சாய்வைப்பொருந்து உயரத்தை கூட்டியோ அல்லது குறைத்தோ காட்டும். இந்த கோடுகள் சாய்வான நெசவின் (diagonal weave) வழியாக பார்வையை இயக்கி உருவத்தை மெலிதாக்கி காட்டுகிறது.

வளைவான கோடுகள் (curve lines)

இந்த கோடுகள், இயற்கையாக உடலின் வடிவத்தை பிரதிபலிக்கிறது. வளைவு கோடுகள் வடிவமைப்பு அல்லது உடலின் மெளிதான மற்றும் மொத்தத்தன்மையைக் காட்டுகிறது. இந்த வளைந்த கோடுகள் வட்ட இயக்கத்தில் சற்று நேராக தோன்றும். இந்த வரிகள் பார்க்கும் போது அழகாகக் காட்சியளிக்கும் இம்மாதிரியான கோடுகள் திசைகளை குறிக்க பயன்படுகிறது.

கிடைநிலை, செங்குத்து, சாய்வான, வளைவான கோடுகளின் நகர்வுகள் எதிரான நிலை (opposition) மாறுதல் (transition), ரேடியேஷன் (Radiation) ஐ உருவாக்குகிறது.

ஒரு வடிவமைப்பில் அல்லது வரைபடத்திலும், சாய்வான கோடுகள் பயன்படுத்தப்படுகிறது, அவை கிடைநிலை மற்றும் செங்குத்தான கோடுகளின் சேர்க்கையாகும்.

வளைவான கோடுகளை உடைய வரைபடங்கள் டிரான்ஸிசன் (Transition) போன்ற தோற்றத்தை அளிக்கும்.

பின் டக்குடனான காலர் (Fig 8)

க்ளோத்திங் (Clothing) என்பது இரு பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது.

- ஸ்ட்ரக்சுரல் டிசைனிங் (Structural designing)

Fig 1



COLLER WITH PIN DUCK STITCH

FT120111

- டெக்கரேட்டிவ் டிசைனிங் (decorative designing)

ஸ்ட்ரக்சுரல் டிசைனிங் (Structural designing)

இது ஒரு ஆடையின் வடிவமைப்பை விவரிக்கிறது. பேட்டர்ன் மாஸ்டரால் (Pattern Master) உறுவாக்கப்படுகிறது.

ஆடைகளின் வேவ்வேறு பாகங்கள் தனித்தனியாக வரையப்பட்டு, அவை சாம்பிள் பேட்டர்கள் (Sample Pattern) தயார் செய்ய பயன்படுத்தப்படுகிறது. கடைகளில் இது போன்ற வேலைகள் டிசைனர்களால் (Designing) செய்யப்படுகிறது. அதில் உருவாக்கம், வண்ணம், நூல் அளவுகள், வெட்டுமுறை போன்ற குறிப்புகள் குறிக்கப்பட்டிருக்கும். இது தொழிற்சாலை பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படுகிறது.

அலங்கார வடிவமைப்பு (Decorative design)

இது பொட்டிக் (Boutique)ல் தனி ஒரு வாடிக்கையாளருக்கு வடிவமைக்கப்படுவதாகும். ஸ்டான்டர்ட் அளவுகள் (Standard measurements) குறிப்புகளோ இவற்றுள் கிடையாது. இவை தனி நபர் வடிவமைப்பிற்கு பயன்படுகிறது.

வரையும் கருவிகள் மற்றும் பலவகையான கோடுகள் (Forms and geometrical drawings)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

- **வடிவங்களை வடிவமைக்கும் படிவங்களின் பட்டியலை வடிவமைத்தல்.**

படிவங்களின் வகை (Type of Forms)

படிவங்கள் பல்வேறு வகைகளாகும், வரைதல் கலையில் அடிப்படையில் வடிவமைப்பதில் பின்வரும் ஐந்து வடிவங்கள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. இந்த அடிப்படை வடிவங்களை அச்சாகக் கொண்டு பலகோணம், ஓவல், க்யூபிகல், உருளை போன்ற பல வடிவங்கள் தயாரிக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. (Fig 1)

இந்த ஐந்து அடிப்படை வடிவங்களும் தேவைக்கேற்ப பயன்படுத்தப்படும் போது வடிவியல் அல்லாத வடிவமைப்புகளுக்கான தளமாகவும் செயல்படுகின்றன.

இந்த படிவங்களில் பயன்பாட்டின் உதவியுடன் வேனஸ் வடிவமைப்புகள் வரையப்படலாம் வடிவமைப்பில் படிவங்களை பயன்படுத்துவது வடிவமைப்பின் முக்கிய அம்சமாகும். சரியான வடிவத்தை ஒரு வடிவமைப்பில் பொருத்தமான நிலையில் வைப்பது சரியான முடிவை அளிக்கிறது.

துணிகள், ஆடைகளில் வடிவமைப்புகள் பிளைன், நேர்கோடு, செம்ஸ், இயற்கை, விலங்குகள் மற்றும் பழ டிசைன் வடிவமைக்கப்படுகின்றன. திருமணம், பிறந்த நாள், விழா, சீருடைகள் மற்றும் வடிவியல் வடிவங்களின் வலுவான கோணங்கள் நிலைத்த தன்மை, சக்தி மற்றும் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன. சமமற்ற வடிவியல் டிசைன்கள் அதிக ஆர்வத்தை கொண்டுள்ளன. வடிவம் என்பது வரிகளால் குறிக்கப்பட்ட இடம். எ.கா ஒரு நிழல் என்பது ஆடையின் வெளிப்புற வடிவம் ஆடையின் கட்டமைப்பு மற்றும் அலங்கார அம்சத்தின் ஒரு வடிவம். துணிகள் மற்றும் ஆடைகள் பல்வேறு வகையான மனித உருவ அமைப்புகளை கொண்ட மக்களில் பயன்படுத்தப்படுகின்றன.

எனவே ஒரு வடிவமைப்பாளர் ஒரு நபரின் உடலின் பயன்பாடுகள் மற்றும் கட்டமைப்பிற்கு (உடல் தோற்றம்) ஏற்ப துணி அல்லது ஆடைகளை வடிவமைக்க வரைபடத்தில் பல்வேறு வகையான வடிவங்களை அடிக் கோடிட்டுக் காட்ட வேண்டும்.

Fig 1



1 சதுரம் (Square) (Fig 2)

90° கோணங்கள் நான்கு பக்கங்கள் ஒரு தட்டையான வடிவம் இது (Fig 2).

(Fig 2)



2 சதுர செவ்வகம் (Rectangle) (Fig 3)

90° கோணங்கள் மற்றும் சமநீளத்தில் எதிர் பக்கங்களை கொண்ட தட்டையான வடிவம்.

(Fig 3)



3 முக்கோணம் (Triangle) (Fig 4)

(Fig 4)



மூன்று பக்கங்களை கொண்ட தட்டையான வடிவம்

4 நீளவட்டம் (Ellipse) (Fig 5)

ஒரு ஓவல் தட்டையான வட்டம்.

(Fig 5)



5 கூம்பு (Cone) (Fig 6)

ஒரு தட்டையான சுற்று அல்லது ஓவல் அடித்தளத்துடன் ஒரு மேல் கொண்ட ஒரு வடிவம் ஒரு புள்ளியில் சுருங்குகிறது.

(Fig 6)



6 அறுங்கோணம் (Hexagon) (Fig 7)

ஆறு நேர் பக்க அறுகோணங்களை கொண்ட ஒருவடிவம் எல்லா பக்கங்களும் சமம்.

(Fig 7)



7 ஆக்டேகன் (Octagon) (Fig 8)

தட்டையான எட்டு பக்கங்களை கொண்ட வடிவம். எல்லா பக்கமும் சமம்.

(Fig 8)



8. பென்டகன் Pentagon (Fig 9)

ஐந்து பக்கங்களை மற்றும் ஐந்து கோணங்களை கொண்டது.

(Fig 9)



9 சரிவகம் Trapezium (Fig 10)

ஒரு தட்டையான நான்கு பக்கங்களின் வடிவம் மற்றும் இரண்டு பக்கங்கள் இணையாக இருக்கும்.

(Fig 10)



10 வட்டம் Circle (Fig 11)

தொடச்சியான வளைந்த கோடு.

(Fig 11)



வடிவங்கள் மற்றும் வடிவமைப்புகள் (Shapes and designs)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

- **வடிவங்கள் பற்றி விளக்குதல்**
- **வடிவமைப்புகள் பற்றி விளக்குதல்.**

வடிவங்கள் (Shape)

வடிவங்கள் என்பது வெவ்வேறு வடிவங்களில் கோடுகளால் ஆன புவியியல் புள்ளி விவரங்கள் பேசன் பிகருக்கு வடிவங்கள் ஒரு தோற்றத்தை தருகின்றன. கோடுகள், வளைவுகள் வேவ்வேறு வகையான வடிவங்களை ஒழுங்குபடுத்துகிறது. சதுரம், செவ்வகம், முக்கோணம், ஓவல், வட்டம் ஆகியவை எம்பிராய்டரியில் பயன்படுத்தப்படும் அடிப்படை வடிவங்கள்.

வடிவமைப்புகள்

வடிவமைப்புகள் தேவைக்கு ஏற்றவாறு பொருத்தமான விகிதாச்சாரத்தில் வடிவங்கள் மற்றும் அளவுகளின் வடிவங்கள் பல்வேறு வகையான வடிவமைப்புகள் உள்ளன. அவை கண்ணுக்கினிய வடிவமைப்புகள், வரைவதற்கான வடிவமைப்பு அதன் நோக்கத்தை அடிப்படையாக கொண்டது. கோடு, வடிவம், நிறம், தொனி, அமைப்பு, திசை அளவு நிறை ஆகியவை வடிவமைப்பில் அடிப்படை கூறுகள்.

வடிவமைப்பை உருவாக்குதல்

நல்ல வடிவமைப்பு மேம்பாட்டுக்கான திறவுகோல் நல்ல தேடலாகும். வடிவமைத்தல் செயல்முறை தொடர்ந்து மாறுபடும். இதற்கு திறன்கள் தேவையான பொருள்களை தேர்ந்து எடுக்க கவனம் செலுத்த வேண்டும். உங்கள் எண்ணங்கள் மற்றும் பொருள் உருவாக்கத் தொடங்கும் பொருள் கருத்துகள் வண்ண திட்டங்கள், கட்டுரைகள், ஓவியங்கள் எங்கிருந்தும் வரலாம் முற்றிலும் அசல் மற்றும் வடிவமைப்பாளருடன் மிகவும் தனிப்பட்ட முறையில் இணைக்கப்படலாம் அல்லது கன்ட்டென்டாகவும் இருக்கலாம்.

அலங்கார பூத்தையல் தொழில்நுட்பம் (Surface ornamentation technique embroidery) - வடிவமைப்பு மற்றும் வளர்ச்சி (Element of design and development)

கலர் கோட்பாடு (Color theory)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

- **கலர் பற்றி தெரிந்து கொள்ளுதல்.**

கலர் (Color)

பூவேலையில் (fashion design) வண்ணம் என்பது உயிரோடத்தை கொடுக்கக்கூடிய ஒரு மூலப்பொருளாகும். மனித வாழ்கையில் வண்ணங்கள் மிக முக்கியமான பங்கைக் பெற்றுள்ளது. கலர்களை தேர்வு செய்தல் மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

வண்ணம் வடிவமைப்பில் ஹார்மணியும் (harmony) இணக்கம் மற்றும் ரிதம் (Rhythm)யும் சமப்படுத்த வேண்டும். வண்ணங்கள் வடிவமைப்பில் ஈர்ப்பையும், உயிரோட்டத்தையும் மற்றும் உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்றது.

வண்ணங்கள் மேற்போக்கான மற்றும் உள்ளு ணர்வுகளில் ஒரு பிரதிபலனை உண்டாக்கும். உணர்வுகளுடன் சார்ந்த சில வண்ணங்கள் உண்டு அவையாவன.

சிவப்பு (Red)

இது நெருப்பு, இரத்தம் மற்றும் அன்பின் வண்ணமாகும். நாம் சிவப்பு நிறத்தை காணவோ,

உணரவோ நேரும் போது அது மிகவும் ஈர்ப்புத்தன்மையையும் மற்றும் நம் மெட்டபாலிசம் (Metabolism) அதிகரிக்கவும் செய்கிறது. அத்துடன் பாரம்பரியமிக்க நிகழ்வுகளில் சிவப்பு குங்குமம், வளையல்கள் முதலியன பயன்படுத்தப்படுகிறது.

மஞ்சள் (Yellow)

இந்த நிறம் மகிழ்ச்சியை, சூரிய ஒளியை, பூக்கள் மற்றும் உற்சாகத்தை கொடுக்கும். இளவேனிற் காலத்திற்கான நிறமாகும். உதாரணத்திற்கு இரு நண்பர்கள் சோகமாக இருக்கும் தருணத்தில் மஞ்சள் நிறத்தைப் பார்த்தால் அவர்கள் மனது சற்று சீராகும்.

பச்சை (Green)

சாந்தமான மற்றும் மரத்தின் வண்ணம் மற்றும் புற்களின் நிறமாகும். இந்த நிறம் விஷம் மற்றும் பொறாமையை உணர்த்துவதால் இது ஆபத்தின் நிறமாகும். ஆலிவ் பச்சை (Olive Green) சிலருக்கு மட்டும் நாகரிக தோற்றத்தை கொடுக்கும்.

நீலம் (Blue)

வானம், கடலின் நிறமாகும் வெளிர் நீலம் இளவயது தோற்றத்தைக் கொடுக்கும். கருநீலம் கம்பீரமான தோற்றத்தை கொடுக்கும்.

ஊதாநிறம் (Purple)

இந்த நேர்த்தியான வண்ணம் இராஜநாகரிகம் (Royal) மக்களால் பயன்படுத்தப்படுகிறது, மாலை நேர ஃபேஷனில் உடைகளில் இந்த வண்ணம் பயன்படுத்தப்டுகிறது, இது செயற்கையான வண்ணமாக இருந்த போதிலும் இதன் வெளிர்நிற ஆடைகள் பெண்களால் அணியப்படுகிறது.

பழுப்பு காவி (Brown)

மண்ணின் வளத்தையும், சோகம் மற்றும் ஏக்கத்தையும் குறிக்கும். இதனை மிகவும் கலர்ஃபுல்லாக பயன்படுத்துவதன் மூலம் மிகவும் ரோமேன்டிகான (Romantic) நிறமாகும்.

வெள்ளை (White)

தூய்மை, அமைதி, வெகுளித்தன்மை ஆகியவற்றை குறிக்கும். ஆனால் அதிகப்படியாக இவ்வண்ணத்தை பயன்படுத்துவது மன அழுத்தத்தைக் கொடுக்கும். இது குளிர் காலத்தை குறிக்கும்.

கருப்பு (Black)

இரவு, மரணம், தீமை, சூனியம், சமயம் சார்ந்த நிறமாகும். பார்ட்டி (Party) மற்றும் மாலை நேர உடைகளில், பயன்படுத்தப்படுகிறது. இது குளிர்காலத்திற்கு ஏற்ற நிறமாகும்.

வண்ணம் மூன்று விதமாக பிரிக்கப்படுகின்றன. ஃயூ (hue), வேல்யூ (Value), இன்டென்சிட்டி (Intencity).

ஃயூ (hue)

வண்ணத்திற்கு வேறு பெயர்.

வேல்யூ (Value)

ஒரு வண்ணத்தின் மெல்லிய அல்லது அடர்த்தியை குறிக்கும் (lightness or darkness)

இன்டென்சிட்டி (Intencity)

வண்ணத்தின் பிரகாசத்தையோ அல்லது மந்தமான நிலையையோ குறிக்கும் (brightness or delightness).

வண்ணச்சக்கரம் (Color wheel)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

- ***கலர் வீல் பற்றி விளக்குதல்.***

கலர் வீல் (Color Wheel)

கலர் வீலில் 12 வண்ணங்கள் உண்டு மற்றும் அதில் முக்கியமான வண்ணங்கள பிரைமரி கலர்களாகும் (Primary colours), செக்கண்டரி கலர் (Secondary colours), டெர்ஷரி கலர் (Tertiory colours).

இந்த வண்ணங்கள் ஒன்றுடன் ஒன்றிர்க்கு உள்ள தொடர்பினை தீர்மானிக்க பயன்படுகிறது.

பிரைமரி கலர் (Primary colour) என்றால் என்ன?

இந்த வண்ணங்கள் இயற்கையானவையாகும் இவை எந்த நிறத்தையும் கலப்பதன் மூலம் பெற முடியாது. அவை சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகும்.

செக்கண்டரி கலர் (Secondary colour) களை எவ்வாறு பெறுவீர்கள்?

இரண்டு பிரைமரி வண்ணங்கள் சம விகிதத்தில் கலக்கப்படும் போது செக்கண்டரி வண்ணங்கள் கிடைக்கும்.

சிவப்பு (1 துளி) + மஞ்சள் (1 துளி)
= ஆரஞ்சு

மஞ்சள் (1 துளி) + நீலம் (1 துளி)
= பச்சை

நீலம் (1 துளி) + சிவப்பு (1 துளி)
= வயலைட் (Violet)

டெர்ஷரி வண்ணங்களை எவ்வாறு பெறுவது?

செக்கண்டரி நிறத்துடன் ஒரு பிரைமரி நிறத்தை கலப்பதன் மூலம் டெர்ஷரி (Tertiory) நிறம் கிடைக்கிறது.

சிவப்பு (2 துளி) + மஞ்சள் (1 துளி) = சிவப்பு ஆரஞ்சு

மஞ்சள் (2 துளி) + சிவப்பு (1 துளி) = மஞ்சள் ஆரஞ்சு

இந்த கட்டத்தில் நாம் குடும்ப நிறத்தை காணலாம்,

சிவப்பு

(சிவப்பு, சிவப்பு ஆரஞ்சு, ஆரஞ்சு, மஞ்சள் ஆரஞ்சு, மஞ்சள்)

மஞ்சள் (2 துளி) + நீலம் (1 துளி)
= மஞ்சள் பச்சை

நீலம் (2 துளி) + மஞ்சள் (1 துளி)
= நீலப்பச்சை

இங்கு நாம் பச்சை குடும்ப நிறத்தை காணலாம்.

(மஞ்சள், வெளிச் பச்சை, பச்சை, நீலம், பச்சை, நீலம்)

நீலம் (2 துளி) + சிவப்பு (1 துளி)
= நீலம் வயலைட் (Violet)

சிவப்பு (2 துளி) + நீலம் (1 துளி)
= சிவப்பு வயலைட் (Violet)

நீல நிற குடும்பத்தின் குடும்பத்தை காணலாம்.

(நீலம், ராயல் புளூ (Royal blue) வயலட் (Violet), ஊதா (Purple), சிவப்பு)

வண்ணங்களை கலப்பதில் முறையான முன்மொழியாக இருக்க வேண்டும். இது தகுந்த நிறத்தைக் கொடுக்கும்.

வேல்யு (Value) என்றால் என்ன?

இயற்கையான (natural) நிறத்தில் வெள்ளை நிறம் அல்லது கருப்பு நிறம் சேர்க்கப்படும் போது, ஒரு வண்ணத்தின் வெளிர் அல்லது அடர்த்தியான (light or dark) ஷேட் (Shade) பெற முடியும்.

தங்கள் விருப்பப்படி ஒரு வண்ணத்தை எடுத்துக் கொள்ங்கள், வெள்ளை நிறத்தின் சிறிய துளிகளைச் சேர்க்கத் தொடங்குங்கள் அந்த வண்ணம் படிப்படியாக வெள்ளை நிறத்திற்கு மாறுவதை காணலாம்.

வண்ணச்சக்கரத்தில் அனைத்து வண்ணங்களைவும் பூசப்படும் போது (12 வண்ணம்), அவை வார்ம் கலர்ஸ் (warm colours) மற்றும் கூல் கலர்ஸ் (Cool colours) என்று 2 வகைகளாக பிரிக்கப்படுகின்றன.

ஊதா (Purple) முதல் மஞ்சள் (yellow) வரை வார்ம் கலர்ஸ் (warm colours) மற்றும் வெளிர்ப்பச்சை (light green) முதல் வயலைட் (violet) கூல் கலர்ஸ் (Cool Colours) ஆகும்.

குளிர் காலங்களில் வார்ம் கலர் (warm colour) கொண்ட துணிகளை பயன்படுத்துவதன் மூலம், நமக்கு சற்று சூடான அமைப்பைக் கொடுக்கும். கோடை காலத்தில் கூல் கலர்ஸ் (Cool Colours) பயன்படுத்துவதன் மூலம் சற்று குலுமையாக இருக்கும்.

கலர் ஸ்கீம்ஸ் மற்றும் அவற்றின் தொடர்புகள்

வண்ணச் சக்கரத்தில் சமமாக வைக்கப்படும் 2 வண்ணங்களை அதாவது சமமான இடைவெளியில் அமையும் 2 வண்ணங்களை டையட் (Diad) நிறங்கள் எனப்படும்.

(எ.டு.) ஆரஞ்சுடன் சேர்ந்த சிவப்பு

நீலத்துடன் சேர்ந்த வையலட் (violet)

வண்ணச்சக்கரத்தில் சமமாக வைக்கப்படும் 3 வண்ணங்களை அதாவது சமமான இடைவெளியில் அமையும் 3 வண்ணங்களை டிரையடு (Triad) நிறங்கள் எனப்படும் .

(எ.டு) சிவப்பு, மஞ்சள், நீலம், ஆரஞ்சு, பச்சை, வையலட் (violet)

கலர் வீலில் (Colour Wheel) நான்கு வண்ணங்கள். சமமான இடைவெளியில் அமைவது டெட்ராட் (Tetrod) எனப்படும்.

வண்ணச்சக்கரத்தில் ஒரு வண்ணத்திற்கு நேர் எதிரே மற்றொரு வண்ணம் வருவதை காம்பிளிமென்ட்ரி கலர்ஸ் (Complimentory colours) எனப்படும்.

(எ.டு): ஆரஞ்சு (Orange) நீலம், மஞ்சள் மற்றும் வையலட் (Violet)

பச்சை மற்றும் ஊதா (Purple)

ஸ்பிலிட் காம்பிளிமென்ட்ரி வண்ணங்களில் (Split Complimentary) 4 வண்ணங்களை தேர்வு செய்வது.

(எ.டு) மஞ்சள் மற்றும் மஞ்சள் பச்சை

நீல வையலட் மற்றும் வையலட் (Violet)

நிறம் அற்ற அல்லது இயற்கை நிறம் அற்ற வண்ணங்களை அக்ரோமேட்டிக் கலர்ஸ் (Achromatic Colours) என்கிறோம். (எ.டு) வெள்ளைக் கருப்பு சாம்பல் நிறம்.

ஒரு வண்ணத்தின் பல்வேறு வேல்யூ (Value) மற்றும் இன்டென்சிட்டி (Intencity)ஐ மோனோக்ரோமேட்டிக் (Monochromatic) வண்ணம் எனப்படும்.

வண்ணத்தின் குவாலிட்டி (Quality) என்றால் என்ன?

வெளிர் மற்றும் அடர்த்தியான வண்ணங்களின் சேர்மத்தை வண்ணத்தின் குவாலிட்டி (Quality) என்கிறோம்.

வடிவமைப்பிற்கு கலர் ஸ்கீம் மூலம் வண்ணமிடுதல் (Color schemes)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

- **வண்ணங்களின் ஒத்திகையை (harmony) விளக்குதல்.**

கலர் ஸ்கீம்ஸ் (கலர் ஹார்மணிஸ்) Color Scheme (Color harmony) (Fig 1)



மோனோக்ரோம் வண்ணம் வெவ்வேறு மதிப்பில் ஒரே ஒரு வண்ணம், அதாவது வண்ணத்தின் வெளிர் மற்றும் அடர்ந்த, பிரகாசம் அல்லது மந்தமான வண்ணங்களின் இணைப்பாகும். மோனோக்ரோம் (Monochrome) வண்ணங்களுக்கு உதாரணம் ஒரே நிறத்தில் வெள்ளை, சாம்பல் நிறம் அல்லது கருப்பு போன்ற வண்ணங்கள் இணைப்பது.

(எ.க). சிவப்பு, ரோஸ் (rose) மற்றும் பிங்க் (pink)

(சிவப்பு நிறத்தை வெள்ளை நிறத்துடன் கலப்பதினால் கிடைக்கும்).

கலர் வீலில் (Colour Wheel) வண்ணங்கள் ஒன்றிர்க்கு ஒன்று பக்கத்தில் உள்ள நிறங்கள் அனலாக்கல் கலர் (Analogous colours) எனப்படும்.

உதாரணத்திற்கு நீலம் மற்றும் வையலட் நிறங்களின் வேல்யூ (value) மற்றும் இன்டன்சிட்டி (Intensity) ஐ குறிக்கும்.

கலர் வீலில் நேர் எதிர் எதிர் வண்ணங்களை காம்பிளிமண்டாரி கலர்ஸ் (Complimentary colours) என்கிறோம்.

உதாணரத்திற்கு வையலட் மற்றும் மஞ்சள், சிவப்பு மற்றும் பச்சை, நீலம் மற்றும் ஆரஞ்சு இவை காம்பிளிமென்டாரி நிறங்களாகும்.

ஒரு பிரைமரி கலர் அதன் காம்பிளிமென்டாரிக்கு அருகின் உள்ள இரு வண்ணங்கடன் அமைவதை ஸ்பிலிட் காம்பிளிமென்டாரி என்கிறோம். (எ.க) வையலட் (violet) மஞ்சள் பச்சை மற்றும் ஆரஞ்சு, மஞ்சள் ஆகிய வண்ணங்களின் பலதரப்பட்ட வேல்யூ மற்றும் இன்டன்சிட்டியை உடைய கலர் ஸ்கீம் ஆகும்.

கலர் வீலில் (Colour Wheel) மூன்று வண்ணங்கள் சமமான இடைவெளியில் அமைவது (equilateral traingle) டிரைஎட் (Triad) நிறங்களாகும். இவற்றிக்கு பேலன்ஸ்டு கலர்ஸ் (Balanced colours) என்றும் வேறு பெயர் உண்டு. (எ.க) சிவப்பு, நீலம் மற்றும் மஞ்சள், பச்சை, ஆரஞ்சு மற்றும் ஊதா முதலியன டிரைட் வண்ணங்களாகும்.

டபுள் ஸ்பிலிட் காம்பிளிமென்டாரிக்கு டெட்ராடிக் (Tetrodic) என்று வேறு பெயர் உண்டு. இவை காம்ப்லிமெண்ட்ஸ் (Compliments) இரண்டன்தொகுதியை ஒரு பகுதி நகர்த்தியவாறு அமைவது (எ.க) சிவப்பு, பச்சை, ஆரஞ்சு மற்றும் நீலம்.

வார்ம் கலர்ஸ் மற்றும் கூல் கலர்ஸ் (Warm colours & Cool Colours):

சிவப்பு, ஆரஞ்சு மற்றும் மஞ்சள் வார்ம் கலர்ஸாகும். அவை மிகவும் நெருக்கமான உணர்வை ஏற்படுத்தும், நீலம், பச்சை மற்றும் வையலட் (violet) ஆகியவை. இவை நம்மை விட்டு விலகக்கூடிய உணர்வை ஏற்படுத்தும் மற்றும் கூல் டோன்ஸை (Cool tones) உருவாக்கும்.

கலர் ஸ்கீம்ஸ் (Colour Schemes)

மோனோகிரோமேட்டிக் கலர் ஸ்கீம் (Mono Chromatic Colour Scheme)

மோனோகிரோமேட்டிக் கலர் ஸ்கீம்கள் ஒரே வண்ணத்தை பயன்படுத்துவதாகும். இந்த ஸ்கீமில் (Scheme) முக்கியமான வண்ணத்தின் பல தரப்பட்ட அடர்த்தியான ஷேட்கள் (dark shades) டோன்ஸ் (Tones) மற்றும் டின்ட்ஸ் (tints) உள்ளங்கப்பட்டுள்ளது. அத்துடன், ஒரு வண்ணம் வெள்ளை அல்லது வேறு நியூட்ரல் (neutral) வண்ணங்களுடன் கலக்கப்படுகிறது.

அனலாக்கஸ் கலர் ஸ்கீம்ஸ் (Analogous Colour Schemes)

அனலாக்கஸ் கலர் என்றால் கலர் வீலில் ஒரு கலர் பக்கத்தில் ஒட்டியிருக்கும் வண்ணங்களாகும். (எ.கா) பச்சை, மஞ்சள் பச்சை மற்றும் மஞ்சள் அல்லது சிவப்பு, ஆரஞ்சு மற்றும் மஞ்சள் இவை கண்ணிற்கு மகிழ்வூட்டும் படியாகவும் மற்றும் இயற்கையில் காணக்கூடிய வண்ணமாகும். இந்த வண்ணங்களின் இணைப்பு வடிவமைப்பில் பிரகாசத்தையும் மகிழ்ச்சியையும் கூட்டுகின்றன. அணலாக்கஸ் கலர் ஸ்கீமில் ஒரு க்யூ (hue purest form of colour) கட்டாயம் இருத்தல் வேண்டும்.

காம்பிலிமென்டாரி கலர் ஸ்கீம்ஸ் (Complimentary Colour Schemes)

கலர் வீலில் எதிர்எதிரே உள்ள நிறங்கள், அதாவது நீலம் மற்றும் ஆரஞ்சு, சிவப்பு மற்றும் பச்சை, ஊதா மற்றும் மஞ்சள் முதலியனவாகும். இவை மிகவும் ஊக்கமூட்டும் வண்ணங்களாகும். அதிக வேறுபாடு கொண்ட நிறங்கள் அதிர்வான தோற்றத்தை உண்டாக்கும்.

ஸ்பிலிட் காம்பிலிமென்டாரி கலர் ஸ்கீம்ஸ் (Split Complimentary Colour Schemes)

ஒரு கலர் ஸ்கிமில் ஒரு முதன்மையான நிறம் மற்றும் அதன் காம்பிலிமென்டிரிக்கு இரு பக்கம் உள்ள வண்ணங்களையும் கொண்ட கலர் வீலாகும் (Colour wheel) இந்த வண்ணங்கள் களைப்பைத் தவிர்க்கவும் மற்றும் அதிக கான்டிராஸ்டை (contrast) தக்கவைக்கவும், இவை பவர் பாயிண்ட் பிரசன்டேஷன் (Power point presentation) அல்லது கணிணியில் நீண்ட நேரம் வேலை செய்ய நேரும் போதும் பயன்படுத்தப்படுகிறது. அத்துடன், சில வண்ணங்கள் ஒன்றாக கலக்கக்கூடாது அவை சிவப்பு மற்றும் பச்சை போன்றவை ஆகும். பயன்படுத்த வேண்டிய நிறங்கள் சிவப்பு அல்லது ஊதா மற்றும் மஞ்சள் அல்லது பச்சை.

டெட்டிராடிக் கலர் ஸ்கீம் (Tetrodic Colour Schemes)

டெட்டிராட்ஸ் (Tetrads) அல்லது கலர் ஸ்கீமில் காரண தொடர்புடைய நான்கு வண்ணங்களாகும். அதாவது டபுள் காம்பிலிமெண்ட்ஸ் (double compliments).

நியூட்ரல் கலர் ஸ்கீம்ஸ் (Neutral Colour Schemes)

கலர் வீலில் காணப்படாத வண்ணங்களை கொண்ட கலர் ஸ்கீம், நியூட்ரல் எனப்படும். பழுப்பு (Beige) காவி நிறம், வெள்ளை, கருப்பு

மற்றும் சாம்பல் நிறம் இவை அனைத்தும் நியூட்ரல் வண்ணங்களின் எடுத்துக்காட்டாகும்.

வார்ம் மற்றும் கூல் கலர் ஸ்கீம்ஸ் (Warm and cool Colour Schemes)

நீல வண்ணத்தின் சாயல் இல்லாது அமையும் கலர் ஸ்கீமை வார்ம் கலர் ஸ்கீம் எனப்படுகிறது.

சிவப்பு வண்ணத்தின் சாயல் இல்லாது அமையும் கலர் ஸ்கீமை கூல் கலர்ஸ் ஸ்கீம் எனப்படுகிறது.

கிரே கலர்ஸ் (Grey Colours)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

- **கருப்பு மற்றும் வெள்ளை நிறத்தை விவரித்தல்**
- **கிரே நிறத்தை கருப்பு மற்றும் வெள்ளை நிறத்தை பயன்படுத்தி விவரித்தல்.**

கருப்பு நிறம் (Black Color)

இரவு, இறப்பு, தீமை, சூனியம், சமயமாறு பாடற்ற மற்றும் மாலை நேர விருந்துகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. குளிர் காலத்திற்கு ஏற்ற வண்ணமாகும்.

வெள்ளை நிறம் (White Color)

தூய்மை, வெகுளித்தன்மை, அமைதி போன்றவற்றை குறிக்கும், மற்றும் இது குளிர்காலத்தையும் குறிக்கும். ஆனால் இந்த நிறத்தை அதிகப்படியாக பயன்படுத்துவது மன அழுத்தத்தை ஏற்படும்.

வெள்ளை அல்லது கருப்பு நிறம் இயற்கை வண்ணத்துடன் இணையும் போது வெளிர் அல்லது அடர்த்தியான ஷேடை (Shades) பெற முடியும்.

கருப்பு + வெள்ளை = சாம்பல் நிறம்

கருப்பு, வெள்ளை மற்றும் சாம்பல் நிறம் (grey) இவை ட்ரு கலர்ஸ் (true colours) அல்ல. அவை நியூட்ரல் அக்ரோமேட்டிக் கலராக (Neutral achromatic Colour) கருதப்படுகின்றது.

வெளிர் நிறங்கள் அல்லது சாம்பல் நிறம் (Light Colours or Gray colour)

கருப்பு நிறத்துடன் வெண்மை நிறத்தை கலப்பதாகும். இங்கு வெளிர் நிறங்களின் ஷேட்களை (shades) காணலாம். இந்த சாம்பல் நிறங்களை ஆடையில் காண முடியும்.

கலரின் உளவியல் அம்சங்கள் (Psychological aspects of colour)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

- **கலரின் உளவியல் அம்சங்கள் பற்றி விளக்குதல்.**

1 டோன் (Tone)

2 வெளிர்நிறம் (Light colour)

3 டல் கலர் (dull colour)

4 டார்க் கலர் (dark colour)

5 விவிட் கலர் (vivid colour)

டோன் (Tone)

அடிப்படை அல்லது இயற்கை நிறங்களுடன் கருப்பு வெள்ளையை கலப்பது பிரைட்னஸ் (brightness - பொலிவு) எனப்படும். ஒரு வண்ணத்திற்கு டல்னஸ் (dullness) கிடைக்க இயற்கை வண்ணத்துடன் சாம்பல் நிறத்தை கலக்கவும்.

லைட் கலர்ஸ் (Light Colours)

இயற்கையான நிறத்தில் வெண்மை நிறத்தை கலப்பது. இங்கு வெளிர் நிற வண்ணங்களில் பல ஷேட்களை (shade) காணமுடியும். இம்மாதிரியான நிறங்கள் பெண்களின் ஆடையில் காணப்படுகிறது.

கலர் ஸ்கிமில் (colour scheme) இந்த வண்ணங்கக்கு தனி மதிப்பு உண்டு.

டல் கலர் (dull colour - மந்தமான நிறங்கள்)

வண்ணத்தின் பிரகாசத்தை குறைக்க சாம்பல் நிறத்தை கலப்பதாகும். இந்த வண்ணங்கள் டென்ஷனை (tension) குறைக்கும். குறைந்த அளவு சாம்பல் நிறத்தை கூட்டுவது செறிவற்ற அல்லது நீல நிற தோற்றமும் மற்றும் அதிகப்படியாக

சாம்பல் நிறம் கலப்பது மண் போன்ற அமைப்பையும் ஏற்படுத்தும்.

டார்க் கலர் (dark colour)

டார்க் நிறங்கள் இராஜநாகரீகத்தை சேர்ந்தது. கருப்பு நிறத்தை கலப்பது நிறத்திற்கும், ஆடைக்கும் மதிப்பை கூட்டும். அதிகப்படியான ஆண் அல்லது பெண் உடைகளில் இவ்வண்ணம் காணப்படும். இந்நிறங்களை பார்மல் (formal) மற்றும் சூட் (Suit) போன்ற உடைகளில் காணலாம்.

இந்த நிறங்களுடன் வெளிர் நிறங்களை இணைப்பதன் மூலம் அவை உபயோகத்திற்க்கு வசதியான மற்றும் வழக்கமான அமைப்பை கொடுக்கும்.

விவ்விட் கலர்ஸ் (Vivid colours)

கண்ணை பரிக்கும் வண்ணங்கள் விவ்விட் நிறங்கள் எனப்படும். மிகவும் பிரகாசமாகவும், சக்திமிகுந்ததாகவும் இருக்கும். இந்த நிற உடையை அணியும் நபர்கள் பிறரிடமிருந்து தனித்து காணப்படுவர்.

(எ.க) ஆரஞ்சு மற்றும் நீலம்

மஞ்சள் மற்றும் வையலட் (Violet)

பச்சை மற்றும் ஊதா (purple)

கலர் வீலில் (Colour wheel) அடுத்தடுத்து நான்கு வண்ணங்களை தேர்வு செய்து பயன்படுத்துவது அனலாக்கஸ் (Analosaus) நிறமாகும்.

(எ.க) சிவப்பு, சிவப்பு ஆரஞ்சு, ஆரஞ்சு, மஞ்சல் ஆரஞ்சு.

டிசைன்களை பெரிதுபடுத்துதல் மற்றும் குறைத்தல் (Enlargement and reduction of designs)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

- **டிசைனை பெரிதாக்குதல் மற்றும் குறைத்தல் ஆகியவற்றை கூறுதல்.**

டிசைன் என்பது ஒரு மதிப்பில்லாத வடிவத்தை வெளிப்படுத்தும் ஒரு கலை ஆகும். ஒரு டிசைனை பல்வேறு அம்சங்களையும் காரணிகளையும் கொண்டுள்ளது என்பதை கருதப்படுகிறது. ஒரு டிசைன் ஒரு வடிவிலோ அல்லது வடிவியல் அல்லாத முறை அதன் ஒவ்வொரு இடத்திலும் பயன்படுகிறது. டிசைனின் அளவு முக்கிய பங்கு வகிக்கிறது.

வரையரப்பட்ட வடிவமைப்பு அதன் ஒவ்வொரு அம்சத்திலும் சரியாக இருக்கும் ஆனால் தேவையான அளவை பூர்த்தி செய்யத் தவறினால் அது பயனில்லை. (அதன் நோக்கத்தை தெரிவிக்கவும்) தேர்ந்தெடுக்கப்பட்ட வடிவமைப்பு ஒன்று இருக்கலாம் நோக்கத்திற்கு ஏற்றவாறு விரிவாக்கப்பட்ட அல்லது குறைக்கப்பட்ட வடிவமைப்பை விரிவாக்குவது அல்லது குறைப்பது ஒரு திட்டவட்டமான முறையை பின்பற்றி செய்யப்படுகிறது. வடிவமைப்பை தேர்வு செய்வது முதலில் பார்க்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகிறது. அதை பெரிதாக்க அல்லது குறைக்க முடிவு செய்யப்படுகிறது. வடிவமைப்பின் தேவையான அளவு இறுதியில் செய்யப்பட்டுள்ளது. அசல் வடிவமைப்பு பின்னர் அவற்றை விரிவாக்க அல்லது குறைக்க விகிதாசாரமாகக் குறைக்கப்படுகிறது. (அதிகரித்த) விரிவாக்கத்தின் அளவீடுகளைப் பயன்படுத்திட வடிவமைப்பு பெரிதாக்கப்படுகிறது அல்லது குறைக்கப்படுகிறது. அசல் வடிவமைப்பு, அளவிடப்படுகிறது மற்றும் அதை விரிவாக்க அல்லது குறைக்க வேண்டிய விகிதம் கண்டுபிடிக்கப்பட்டு மாற்றப்படுகிறது.

அலங்கார பூத்தையல் தொழில்நுட்பம் (Surface ornamentation technique embroidery) - வடிவமைப்பு இடம் (Placement of design)

வரைதல் வடிவமைப்பு அறிமுகம் பார்டர், தெளிந்தல், கார்னர் டிசைனை டெவலப் மற்றும் வரைதல் வடிவமைப்பு அறிமுகம் (Introduction, development and drawing of design (Border, Spray corner, Center links))

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

- **பார்டர் டிசைனை டெவலப் செய்வது பற்றி விவரித்தல்.**

துணிகளின் தன்மை

பூவேலை செய்வதற்கென்று நாம் தேர்ந்தெடுக்கும் துணி மிகவும் மெல்லியதாகவும் பார்பதற்கு பளபளப்பாகவும், சாயம் போகாத துணியையும், சாயம் என தெரிந்த துணிகள் அதாவது சில கலர்கள் சாயம் அதிகமாக போகும். அவற்றை வாங்கக்கூடாது, பூவேலை செய்வதற்கு ஏற்றாற் போல் அவற்றின் தன்மைக்கேற்றாற் போல் துணியை தேர்ந்தெடுக்க வேண்டும். நீரில் போட்டவுடன் சுருங்கிப்போகும் தன்மையுடைய துணியை வாங்கக் கூடாது. துணியின் தன்மை தெரியாமல் நாம் பூவேலை செய்தோமானல் நாம் சிரமத்தோடு பூவேலை செய்ய வேண்டியதோடு செய்த வேலையின் பயன் இல்லாமல் போய் விடும். மேலும் துணியை வாங்கும் போது, கிழிந்தும் கறை படிந்து இல்லாமல் இருக்க வேண்டும்.

சில வகைத் துணிகள் தண்ணீரில் சுருங்கும் தன்மையுடையதாகும் ஆகையால் பூவேலை செய்யும் முன் துணியை தண்ணீரில் நனைத்து சுருக்கி கொள்ள வேண்டும்.

துணியை இஸ்திரி செய்தல்

பூவேலை செய்ய வேண்டிய துணியை பூவேலை செய்வதற்க்கு முன்பும் டிசைன் உண்டாக்குவதற்கு முன்பும் இஸ்திரி (Iron) செய்ய வேண்டும். பூ வேலை செய்த பின்பும் டிசைன் படிந்து பார்ப்பதற்கு அழகாக இருக்கும்படி இஸ்திரி செய்ய வேண்டும்.

பூவேலை செய்யும் முன் பொருளுக்கு ஏற்ற துணியை தேர்ந்தெடுக்க வேண்டும். (உ.ம்) மேசை விரிப்பு (Table Cloth) சாட்டின் (Satin) பாப்ளின், கேஸ்மன்டு (Casement) போன்ற துணிகளை தேர்தெடுக்க வேண்டும் எந்த துணியில் செய்கிறோமோ அதற்கு ஏற்றாற் போல் உபயோகிக்க வேண்டும்.

மெல்லிய ஆர்கண்டி துணியில் ஷடோவ் வர்க் (நிழல் வேலை) போன்றவற்றையும் மேட்டி (matty) (Natti) துணியாக இருந்தால் கிராஸ் ஸ்டிச் (Cross stitch) தைக்கலாம்.

டிசைனை சரி செய்தல்

பூவேலையில் துணியில் டிசைனை மாற்றுவது முக்கிய வேலையாகும். டிசைனை மாற்றும் போது எந்தெந்த துணிக்கு எந்த முறையில் மாற்ற வேண்டுமோ அதன்படி மாற்ற வேண்டும்.

பிரேமில் இழுவிசை செய்தல்

பூவேலை செய்யும்போது பிரேமில் உள்ள துணியின் இழுவிசை சரியாக இருந்தால் தான் பூவேலையை அழகாக செய்ய முடியும். இழுவிசை சரியாக இல்லாவிடில் துணியில் பூவேலை சுருங்கிவிடும் இழுவிசை அளவுக்கு அதிகமாக இருந்தால் அதாவது மெல்லிய துணியாக இருப்பின் கிழிந்து விடும். ஆகையில் துணியின் தன்மைக்கு ஏற்ப இழுவிசை அமைய வேண்டும்.

எப்போதும் பூவேலை செய்யும் போது அதிகமான நூலை ஊசியில் கோர்க்காமல் அளவான முறையில் நூலை கோர்க்க வேண்டும்.

புடவையின் பார்டர் டிசைனை வரைதல்

புடவையின் கரைபாகத்தில் இருந்து 2 அளவிற்க்கு கோடு ஒன்றை மெல்லியதாக வரையவும் கோட்டிற்க்கு மேல் துணியின் தன்மைக்கு தகுந்த புரோசிங் முறையை உபயோகப்படுத்திட டிசைனை துணியில் வரைந்துக் கொள்ள வேண்டும். டிசைன் கறைபாகம் மெல்லிய பார்டர்களோ அல்லது பெரிய பார்டராகவோ, டிசைனை புடவையில் கீழ் பகுதியில் இருந்து ஆரம்பித்து புடவையின் தலைப்பு பகுதியில் 'ப' வடிவத்தில் டிசைனை வரைந்து கொள்ள வேண்டும், இவ்வீதம் டிசைனை வரைவதால் புடவையில் பூவேலை செய்த பிறகு கரை பாகம் முழுவதும் பூவேலை செய்தது போல் அழகாக காட்சி அளிக்கும்.

Table Cloth border ல் டிசைன் வரைதல்

மேபுள் கிளத்தின் இரண்டு ஓரங்களிலும் 4' inch அல்லது 5' inch அளவிற்க்கு கோடு வரைந்து அவுட் லைன் போட்டுக் கொள்ளவும்.

கோட்டின் மேல் பகுதியில் பார்டர் டிசைனை வரைய வேண்டும். துணிக்கு தகுந்த புரேசிங் முறையை உபயோகித்து டிசைனை துணியில் வரைந்து கொள்ள வேண்டும்.

தெளித்தல் டிசைன் மற்றும் கார்னர் டிசைன் (Spray design & Corner design)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

- **தெளிப்பு டிசைன் பற்றி விவரித்தல்**
- **கார்னர் டிசைன் பற்றி விவரித்தல்.**

Spray-corner

Spray - ஒரு அலகு முழு ஆடையின் மீது கிடைமட்டமாகவும் செங்குத்தாகவும் சமதூரத்தில் வைக்கப்படும் போது தெளிப்பு அமைப்பு என்று அழைக்கப்படுகிறத. லேடிஸ் சூட்ஸ், குர்தா, புடவை போன்ற ஆடைகளில் இந்த வகை அமைப்புகளைப் பயன்படுத்தலாம்.

Saree புடவை: புடவையின் சமதூரத்தில் தெளிப்பு போன்ற அமைப்பில் டிசைன் எல்லா இடத்திலும் சமமாக அமைக்கப்பட்டிற்க்கும். இந்த தெளிப்பு டிசைன் (சேரியின்) புடவையில் நிரப்பிப்படுகிறது.

Fig 1

டேபிள் கிளாத் (Table cloth): டேபிள் கிளாத் எல்லா இடத்திலும் சமதரத்தில் டிசைன் (Design) பரவி இருக்கும்.

Fig 2



Fig 3

கார்னர் (Corner)

Fig 4

டேபிள் கிளாத்தின் - (Table cloth) ஓரத்தில் டிசைன் அமைக்கப்பட்டிருப்பதை Corener design என்று அழைப்பர். டேபிள் கிளாத்தின் நான்கு மூலைகளிலும் டிசைன் காணப்படும்.

கைக்குட்டை (Hand kerchief): கைக்குட்டையின் நான்கு மூலையிலும் டிசைன் அமையப் பெற்றிருக்கும்.

Fig 5

சென்டர் டிசைன் மற்றும் தொடர்ச்சியான டிசைன் (Center design & Link design)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

- **சென்டர் டிசைன் பற்றி அறிதல்**
- **தொடர்ச்சியான டிசைன் பற்ற விளக்குதல்.**

சென்டர் டிசைன் பற்றி அறிதல் தொடர்ச்சியான டிசைன் பற்றி அறிதல் (Center design, Link design)

Center design -ஐ மைய டிசைன் இந்த அமைப்பில் படுக்கை துணியின் மையத்தில் வைக்கப்பட வேண்டும் குர்தா, ஆண்கள் குர்தா ஆண்களின் சட்டை பின்புறம், ப்ராக் போன்வற்றில் சென்டர் டிசைன் அமையப்பெற்றிருக்கும்.

ரவிக்கை Bloues

சென்டர் டிசைன் பிளவின் பின்புறம் மற்றும் கைகளில் அமையப் பெற்றிருக்கும்.

Fig 1

டேபிள் கிளாத் (Table cloth)

டேபிள் கிளாத்தின் நடுப்பகுதியில் டிசைன் இருக்கும்.

Fig 2

கைக்குட்டை (Hand kerchief)

கைக்குட்டையின் நடுப்பகுதியில் டிசைன் அமைந்திருக்கும்.

Fig 3

தொடர்ச்சியான டிசைன் (Link design)

தொடர்ச்சியான டிசைன் புடைவையின் ஓரத்தில் அமைந்திருக்கும், இந்த டிசைன் புடவையில் எல்லத இடத்திலும் இருக்கும்.

Fig 4

ரவிக்கை Bloues

ரவிக்கையின் கழுத்து பகுதியில் தொடர்ச்சியான டிசைன் (Links design) அமைந்திருக்கும். ரவிக்கையின் கைப்பழுதி மற்றும் ஹாடம்கோல் அமைந்திருக்கும்.

Fig 5

டேபிள் கிளாத் (Table cloth)

Table cloth சதுரமான டேபிள் கிளாத்தின் நான்கு பக்கமும் டிசைன் அமைந்திருக்கும் மற்றும் வட்ட வடிவமான டேவிள் கிளாத்தில் கரை பாகத்தில் தொடர்ச்சியான டிசைன் அமைந்திருக்கும்.

கைக்குட்டை (Hand kerchief)

கைக்குட்டையின் ஓரத்தில் நான்கு பக்கம் தொடர்ச்சியான டிசைன் அமைந்திருக்கும்.

கைப்பகுதி மற்றும் யோக் பகுதி (Sleeve and yoke part)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

- **கைப்பகுதி மற்றும் யோக் பகுதியில் டிசைனை விவரித்தல்.**

வடிவமைப்பு இடம் (Placement of the design)

Sleeve - Yoke

சட்டை கை - Sleeve

ஒரு ஆடைக்கு கைப்பகுதி நாகரிகத்தையும், பருவகாலத்தையும் பொறுத்தே அமையும். கைகள் பல்வேறு வகைகளில் வந்துள்ளன அவை பார்வைக்கு ஏற்ற முறையில் வேறுபட்டு உள்ளன. கையினுடைய கீழ்பகுதி பரப்புள்ளதான உள்ள இடத்தில் பூவேலையால் அலங்கரிக்கப்படுகிறது.

Set sleeve - சட்டை கைகளில் மைய டிசைன் (Center design) மற்றும் கையின் பார்டர் டிசைன்களாலும் பூவேலை செய்து அழகுபடுத்தப்படுகிறது நீளமான கைகளிலும் இதே போல் பூவேலை செய்யப்படுகிறது.

Yake - சட்டை தோள்பட்டை (yoke)

சட்டை கழுத்து தோள்பட்டை பொதுவாக இரண்டு வகைப்படும்.

Classic shirt yoke - பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டைக்கழுத்து தோள்பட்டை.

Western shirt yoke - மேற்கத்திய நாட்டு சட்டை கழுத்து தோள்பட்டை.

பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டை கழுத்து தோற்பட்டை பின்புறம் அமைந்த கழுத்து தோள்பட்டையாக முழுவதும் கோடிடப்பட்டு இரண்டு தோள்பட்டை ஓரத்தையல்களும் இணையும்படியாக பின்புற கழுத்து தையல் ஓரமும் பொருத்துவதாக இருக்கும் இவை பூவேலையால் அலங்கரிக்கப்படுகிறது. Western shirt yoke - மேற்கத்திய நாட்டு சட்டை கழுத்து தோள்பட்டை பின்புறம் அலங்காரமாக அமைந்திருக்கும் இதை ஒட்டி அலங்கார பூத்தையல் கொண்டு ஒப்பனை செய்யப்படுகிறது.

சுற்றுப்பட்டை மற்றும் கழுத்து பகுதி (Cuff & Neck)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

- **கப்பின் (Cuff) வடிவமைப்பு பற்றி அறிதல்**
- **கழுத்து பகுதியில் வடிவமைப்பு பற்றி அறிதல்.**

Placement of design - Cuff & Neck

கப்பிள் வடிவமைப்பு பற்றி அறிதல்

கழுத்து பகுதியில் வடிவமைப்பு பற்றி அறிதல்

Cuff - Necks

சட்டைக் கையின் சுற்றுப்பட்டை அமைக்கப்படுவது மணிக்கட்டுப் பகுதி ஆகும். திறப்பு வாய் திறப்பு பகுதி கொண்ட மணிக்கட்டு பகுதி மணிக்கட்டை சுற்றி நீளமான சட்டை கைப்பகுதி.

ஆண்களின் பார்மல் (Farmal dress) உடைகளில் கையின் சுற்றுப்பட்டை (Cuff) பகுதியில் டிசைன் வடிவமைக்கப்பட்டிருக்கும். இதில் டிசைன் சிறிய போடிப் போன்று அமைந்திருக்கும்.

பெண்களின் ஆடைகளில் வரும் கப் டிசைன் ஓரம் ஒத்து இருக்கும் கரை பாகம் முழுவதும் டிசைன்அமைந்திருக்கும்.

குழந்தைகளின் உடைகளிலும் ஃகப் (Cuff) டிசைன்கள் அழகாக காணப்படும்.

கழுத்து (Neck)

கழுத்து கோடுகளின் மாதிரிகளுக்கு பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது ஏடுகளில் அது கடையின் தோற்றத்தையும் அதை அணிபவருக்கு ஏற்ற வகையிலும் அமைந்திருக்கும்.

கழுத்து கோடுகள் விசேஷ கவனத்துடன் வடிவமைக்கப்ட வேண்டும் ஏனெனில் அது பார்ப்பவர்களின் கவனத்தை ஈர்க்க வேண்டும்.

அனைத்து கழுத்து அமைப்புகளும் மூன்று முக்கிய வடிவ மாறுதல்கள் கொண்டிருக்கும் வட்டவடிவம், சதுர வடிவம் மற்றும் V வடிவம்.

கழுத்துக் கோட்டை தேர்ந்தெடுக்கும் போது அதை அணிபவரை பற்றி கவனத்தில் கொள்ள வேண்டும்.

- வட்ட முகம் - நீள வடிவமான கழுத்துப்பட்டை 'V' கழுத்து (V - Neck)
- ஒல்லியான நீள கழுத்து - நெருக்கமான கழுத்து
- அகன்ற முகம் மற்றும் குட்டையான கழுத்து அகன்ற கழுத்து அமைப்பு.
- நீண்ட ஒடுங்கிய முகம் - மூடிய கழுத்து.

வண்ணத்திட்டம் மற்றும் எம்பிராய்டரி வடிவமைப்பின் இடம் (Placement of colour Schemes and embroidery design)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

• ***பிலேஸ்மென்டின் வகைகள் பற்றி அறிதல்.***

Placement of colour schemes and embroidery designs

வண்ணத்திட்டம் மற்றும் எம்பிராய்டரி வடிவமைப்பின் இடம் (Types of placement) பிலேஸ்மென்டின் வகைகள்.

Horizontal placement - கிடைமட்ட பிலேஸ்மென்ட் டிசைன்

ஆடைகளின் கிடைமட்டமான டிசைன்கள் வரைந்து பூவேலை செய்யப்படுகிறது. துணிகள் வெளீர் நிறமாக இருந்தால் பூவேலையானது அடர் (Dark) வண்ணத்தில் அமைந்திருந்தல் வேண்டும்.

Fig 1

செங்குத்து பிலேஸ்மென்ட (Vertical placement) ஆடைகளில் டிசைன் செங்குத்தாக வரைந்து பூவேலையால் அலங்கரிக்கப்படுகிறது. (Dark) அடர் வண்ண நிறத்தில் துணிகள் அமைந்திருந்தால் வெளீர் (Light) வண்ண நூல்கள் கொண்டு பூவேலை செய்ய வேண்டும்.

Fig 2

ஆப் டிராப் பிலேஸ்மெண்டு (Half Drop Placement)

இதற்க்கு மோடிப் (Matif) design என்ற இரண்டு மோடிப்களுக்கு டிசைன்களுக்கு சிறிய (Bead work) மணி வேலை அல்லது ஆரி வேலை செய்யப்படுகிறது. மற்றொரு கோட்டில் இரண்டு டிசைகளுக்கு நடுவில் வைக்கவேண்டும்.

மூலைவிட்ட, பிலேஸ்மென்ட் (Diagonal placement)

Fig 3

ஒரு சதுரத்தில் ஒரு மூலையிலிருந்து எதிர் மூலையில் ஒரு மூலை விட்டத்தில் டிசைன் செய்யப்படுகிறது. இந்த டிசைன் பார்ப்பதற்கு ஆல் ஓவர் டிசைன் (All over design) போல காணப்படும். வெளிர் நிறம் கொண்ட துணியில் டார்க் (Dark) கலர்கள் கொண்டு செய்யப்பட்ட மோடிப் வேலை, (Mutif work) கண்ணாடியினால் செய்யப்பட்ட வேலைப்பாடு போன்றவை பொருத்தமானதாக இருக்கும். Ex: வெளீர் நீளம் கலர் கொண்ட துணியில் டார்க் (Dark) நீலம் கலர் பூவேலை செய்யப்படகிறது.

Fig 4

அலங்கார பூத்தையல் தொழில்நுட்பம் (Surface ornamentation technique embroidery) - ஜிக் ஜாக் எம்பிராய்டரி இயந்திரம் பொருத்துதல் மற்றும் முன்னெச்சரிக்கைகள் (Zig Zag embroidery Machine and precaution)

ஜிக் ஜாக் மெஷினின் பாகங்களும் அதன் செயல்பாடுகளும் (Zig Zag Machine parts and their functions)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

- **எம்பிராய்டரி இயந்திரத்தின் பாகங்களை கண்டறிதல் அதன் செயல்பாட்டினை அறிதல்.**
- **நீடில் கார்டு முக்கியத்துவத்தை விளக்குதல்.**

எம்பிராய்டரி மெசினின் பொதுவான பகுதிகள் அவற்றின் பணிகள் பின்வருமாறு

1 பெல்ட் (மோட்டார் or மெசின்) (Belt)

பெல்ட் வட்டவடிவத்தை கடக்க உதவுகிறது. கை சக்கரம் இயந்திரத்தை இயக்க அனுமதிக்கிறது.

2 பாபின் வைன்டர் (Bobbin winder)

பாபினில் நூல் சுற்ற உதவும் பகுதி

3 பேஸ் பிளேட் (Face Plate)

பிரஸ்ஸர் பார், நீடில் பாரையும் கவர் செய்துள்ளது. இடது புறத்தில் உள்ளது.

4 ஹேன்ட் வீல் (Hand Wheel)

Fig 1



இரும்பு சக்கரம் என்று அழைக்கப்படுகிறது மெசின் இயக்கத்தை கட்டுப்படுத்துகிறது.

5 தலை (Head)

Table மேலே உள்ள பகுதி மெக்கானிசத்தை உள்ளடக்கியது.

6 கொக்கி (Hook)

ரோட்டரி ஹுக் என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு சுழலும் சாதனம்.

7 மோட்டார்

மெசினை இயக்கும் மின் அலகு

8 நீடில் (Needle)

துணியை ஊடுருவி மேல் நூல் மற்றும் கீழ் நூல் உதவியுடன் தையல் உருவாக்க உதவுகிறது.

9 நீடில் பார் (Needle Bar)

கீழ்முனையில் ஊசியை வைத்திருக்கும் செங்குத்துபட்டி இதன் உதவியுடன் மேலும் கீழும் ஊசி நகர்கிறது.

10 நீடில் பார் கிளாம்பு

ஊசியை பாதுகாக்கிறது.

11 ஆயில் பாதுகாப்பு

மெசினின் ஆயிலின் அளவை குறிக்கும் பகுதி.

12 மெசின் பான்

சுய எண்ணெயிடும் மெசினின் கீழ் அமைந்துள்ளது.

13 கப்பி (Pulley)

மோட்டாருடன் இணைக்கப்பட்டுள்ளது

14 ரோட்டரி ஹுக் அசைம்பிளி

அந்தப்பகுதி பாபின் கேசை வைத்துள்ளது.

15 ஸ்டான்டு

மெட்டல் அல்லது மர அமைப்புடன் கூடியது.

16 சுவிட்ச் (Switch)

மெசினை இயக்க அல்லது முடக்க பயன்படுகிறது.

17 தையல் கன்ரோலர் (Stitch Controller)

தையல் அகலத்தை ஒழுங்குப்படுத்தும் சாதனம்.

18 ஸ்லைடு பிளேட்

இயந்திரத்தின் இடது பக்கத்தில் அகற்றக்கூடிய கவர் இது குறைந்த பொறி முறையை அனுக அனுமதிக்கிறது.

19 மேஜை

Table - மேஜை மேல் தலைப்பகுதி பொறுத்தப்பட்டிருக்கும்.

20 நூல் வழிகாட்டி (Take up lever)

மெசினின் கைபகுதியில் முன்புறமாக மேலும் கீழும் அசையும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. நூலை செலுத்தும் விதமாக சிறிய துவாரம் அமைக்கப்பட்டுள்ளது.

21 திரட் கைடு

நூல் கண்டில் இருந்து ஊசிக்கு வரும் நூலை நல்ல நிலையில் பிடித்துக் கொள்கிறது.

22 திரட் ஸ்டான்டு

நூல் கோனை வைக்க உதவும் மெட்டல் சாதனம்.

23 டென்சன் டிஸ்க்

இதில் இரண்டு குழி வட்டுகள் குவிபகுதி ஒன்றையொன்று பார்த்த மாதிரி இணைக்கப்பட்டிருக்கும். நூலின் விரைப்பு தன்மை ஒரு கம்பி சுருள் மற்றும் ஒரு முறை மூலமாகவும் அதன் அழுத்தம் அதிகப்படுத்துவதற்கும் குறைப்பதற்கும் ஏற்றவாறு சரிபடுத்தப்படுகிறது.

24 Knee pad

நூல் அகவத்தை கூட்ட குறைக்க பயன்படுகிறது. மெசினின் கீழ்பகுதியில் பொருத்தப்பட்டுள்ளது.

ஜிக் ஜாக் இயந்திரத்தின் செயல்பாடுகள் மற்றும் கையாளுதல் பற்றிய கண்ணோட்டம் (Overview of operations and handling of Zig Zag machine)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்
- **எம்பிராய்டரி செய்யும் போது மெசினில் ஏற்படும் கோளாறு மற்றும் காரணங்கள் தீர்வு விளக்குதல்.**

இயந்திர பராமரிப்பு மற்றும் கவனிப்பு (Care and maintenance of the machine): தொடர்ச்சியாக சுத்தப்படுத்துதல், எண்ணெய் இடுதல் ஆகியவை இயந்திரத்தின் பாதுகாப்பான தைத்தலுக்கும், இயந்திரத்தின் நீடித்த உழைப்புக்கும் உதவும் உபயோகத்தில் இல்லாத போது தூசி படியா வண்ணம் இயந்திரத்தை மூடி வைத்து பாதுகாக்க வேண்டும்.

சுத்தப்படுத்துதல் (Cleaning): இயந்திரத்திற்கு எண்ணெய் போடுவதற்கு முன்பு அதில் தேங்கி உள்ள கழிவுகள், நூல் துணுக்குகள் மற்றும் தூசிகள் அகற்றப்பட வேண்டும். கழிவுகளையும், தூசியையும் அகற்றுவதற்கு சிறிய தூரிகை (brush) அல்லது பல் துலக்கும் தூரிகை (tooth brush) மற்றும் மென்மையான துணியை உபயோகப்படுத்த வேண்டும். துடைக்க முடியாத நூல் துண்டுகள் மற்றும் கழிவுகளை அகற்ற ஊசிமுனை கொண்ட ஆயுதங்களை பயன்படுத்த வேண்டும். ஊட்டப் பீடு டாக்கினை (Feed dog) சுத்தப்படுத்துவதற்கு, இயந்திரத்தில் உள்ள ஊசி தட்டை எடுத்துவிட்டு கழிவுகளையும் இயந்திரங்களில் உள்ள பிடித்துக் கொண்டு இருக்கும் தூசிகளையும் அகற்ற வேண்டும் (Fig 1).

Fig 1



தறி நாடாவை (shuttle race) சுத்தப்படுத்த இயந்திரத்துடன் தறி நாடாபொருத்தப் பட்டுள்ள இரு திருகுகளை அகற்றி தறி நாடாவை வெளியில் எடுத்து அதில் உள்ள கழிவு மற்றும் நூல் துண்டுகளை அகற்ற வேண்டும். சில சமயங்களில் தளர்ந்த நூல்கள் மிதி இயந்திரத்தின் பின்பகுதியில் சிக்கி இயந்திரத்தை ஓடவிடாமல் செய்யும், சக்கரத்தில் மாட்டியுள்ள நூல் துண்டுகள் மற்றும் மிதி இயந்திரத்தின் பகுதிகளில் உள்ள தூசி மற்றும் கழிவுகளை அகற்ற வேண்டும். (Fig 2)

Fig 2



எண்ணெய் இடல் (Oiling) இயந்திரத்திற்கு எண்ணெய் இட்டு அது ஒடுவதை அவ்வப்பொழுது சரி செய்வது அவசியமாகும். இயந்திரம் தினமும் உபயோகப்படுத்தப்பட்டால் வாரத்திற்கு ஒரு முறை எண்ணெய் இட வேண்டும். எப்பொழுதாவது உபயோகப்படுத்துதாக இருந்தால் மாதத்திற்கு ஒரு முறை எண்ணெய் இட்டால் போதுமானது. முழுமையாக எண்ணெய் இட, மேல் பகுதி நூல், ஊசி தட்டு, சாய்வுதட்டு, முகப்பு தட்டு, நூல் வட்டு, ஊசி மற்றும் அழுத்த மிதிகளை அகற்ற வேண்டும். எல்லா எண்ணெய் துளைகளிலும் ஒன்றின் மேல் ஒன்றாக இருக்க கூடிய இணைப்புகளிலும் சிறப்பு இயந்திர எண்ணெய் (Special sewing machine oil) போட வேண்டும். எண்ணெய் இடும் போது எண்ணெய் எல்லா பகுதிகளுக்கும் செல்லும் படியாக உருளும் சக்கரத்தை (fly wheel) முன்னும் பின்னுமாக உருட்ட வேண்டும். (Fig 3 & 4)

Fig 3



Fig 4



இயந்திரத்தின் தலை பகுதியில் எண்ணெய் இட்ட பின்பு எண்ணெய் இயந்திரத்தின் அடிப்பகுதி வரை செல்லும் படியாக இயந்திரத்தை அசைத்து கொடுக்க வேண்டும். தறி நாடாவிற்கு (shuttle race) எண்ணெய் போடுவது மிகவும் அவசியமாகும். மிதி இயந்திரத்தில் இயந்திரத்தை பின்புறம் திருப்புமுன் நாடாவை தளர்த்த வேண்டும். (Fig 5)

Fig 5



திட்டுகள் ஏற்படுவதை தவிர்க்கும். அதிகப்படியாக எண்ணெய் இருக்குமானால் ஒரு சொட்டு மண்ணெண்ணையோ அல்லது பெட்ரோலோ ஒவ்வொரு எண்ணெய் துளையிலும், இணைப்புகளிலும் விட்டு இயந்திரத்தை பல நிமிடங்கள் ஓட செய்ய வேண்டும். அதன் பிறகு வெளிவரும் எண்ணெயை ஒரு மென்மையான துணியின் மூலம் துடைத்துவிட்டு மறுபடியும் எண்ணெயிட வேண்டும். இந்த செய்முறைக்குப் பிறகு சில மணி நேரங்களில் இரண்டாவது முறையாக எண்ணெயிட வேண்டும். (Fig 6)

Fig 6



தையல் உருவாக்கம் / பிரச்சனைக்கான தீர்வுகள் (Stitch formation / tourbleshooting)

தையல் உருவாக்கம் (Stitch formation): ஊசி நூலின் வளையமானது துணியின் கீழ் பக்கத்தில் ஊசியினால் உண்டாக்கப்பட்டு இரண்டாவது நூலுடன் கொக்கியினால் பிடித்தம் செய்யப்படுகின்றது. ஊசி துணியில் சொருகப்படுகின்றது. (Fig 7-10)

Fig 7



Fig 8



Fig 9



Fig 10



ஊசி கீழிருந்து மேலே செல்லும் பொழுது ஊசி நூல் ஒரு வளையத்தை ஏற்படுத்த அது கொக்கியில் மாட்டி கொள்கிறது. கொக்கி ஊசி நூலின் வளையத்தை பெரிதாக்குகிறது.ஊசி நூல் வளைவு கீழே உள்ள நூல் கண்டு மூலம் நூலை செயல்படுத்துகிறது.

இடைபின்னல் ஆரம்பம் (interfacing begins)

இழுநெம்புகோல் (takeup lever) தையலை துணிக்குள் இறுக்குகிறது. துணியானது முன்னே செலுத்தப்படுகிறது. (Fig 6)

தையல் சமநிலை (stitch balance) இறுக்கம் தன்மையை சீர்படுத்தும் முன்பு இயந்திரத்தின் மேல்புறமும் கீழ்புறமும் நூல் சரிவர பொருத்தப்பட்டுள்ளதா என்று பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் கீழும் உள்ள நூல்களுக்கு இடையிலான இறுக்கும் தன்மை சமசீராக இருக்கும் பொழுது தையல் கோர்க்கப்படும் அல்லது துணியின் தடிமனான பகுதியின் மத்தியில் இணையும்.

வேலைப்பாட்டின் இருபக்கங்களிலும் தையல்கள் வடிவம் மற்றும் இறுக்கத்தில் ஒரே மாதிரியாகத் தெரியும். மேல் இறுக்கம் அதிகமாக இழுத்துப் பிடிக்கும் பொழுது நூல் கண்டு துணியில் மேல் பகுதியில் நேராக இருக்கும்.

கீழ்பகுதி நூல் துணியின் மேல் பகுதியில் ஒரு வளையம் போல் அமையும். மேற்பகுதி விறைப்புதன்மை மிகவும் தளர்த்தியாக இருக்கும் பொழுது கீழ்பகுதி நூல் துணியின் கீழ் பகுதியில் நேராகவும் மேல் பகுதி நூல் கீழ்பகுதியில் ஒரு வளையம் போலும் காணப்படும்.

விறைப்புத்தன்மையை (Tension) அறிவதற்கான சுலபமான வழி ஒரு சதுரமான துணியை குறுக்கே விட்டமாக 45 கோணத்திற்கு மடித்து கொண்டு அதை சாய்வாக வைத்து நேராக நூலை கோர்த்து பிறகு அந்த துணியை விரல்களுக்கிடையில் கொண்டு ஒரு நூலோ அல்லது இரண்டு நூலுமோ அறுந்து போகும் வரை நீட்டி தைப்பது ஆகும்.

ஒரு நூல் விறைப்புத்தன்மை அதிகமாக இருக்கும் நூலே அறுபடும் நூலாக இருக்கும். விறைப்பு தன்மை சமசீராக இருந்தால் இரண்டு நூல்களும் ஒன்றாக அறுபடும் அல்லது அது அறுபட அதிக பலம் தேவைப்படும். விறைப்புத்தன்மையை சீர்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டால் மேல் பகுதி விறைப்பு தன்மையை சீர்படுத்துவதே நல்லது. மேற்பகுதி விறைப்புத்தன்மையை கூட்டவோ குறைக்கவோ அழுத்த மிதியை

(pressure foot). கீழிறக்கி விறைப்புத்தன்மையை (tension) சீர்படுத்தும் பகுதி மறையை திருப்ப வேண்டும். அந்த மறையை திருப்பும் போது இடதுபுறம் இறுக்கமாகவும் வலதுபுறம் தளர்வாகவும் இருக்க வேண்டும். பொதுவாக விறைப்பு திருகியில் எண்கள் குறிக்கப்பட்டிருக்கும். விறைப்பு தன்மையை அதிகபடுத்த பெரிய எண்ணை நோக்கியும் குறைப்பதற்கு சிறிய எண்ணை நோக்கியும் திருப்ப வேண்டும். ஒரே நேரத்தில் இரண்டு எண்களுக்கு மேலோ அல்லது ஒரு சிறிய திருப்பமாகவோ திருப்ப கூடாது. பிறகு ஒரு மாதிரி துணியை கொண்டு விறைப்பு தன்மையை சரிபார்க்க வேண்டும். மேலே இருப்பதை கொண்டு மட்டும் குறைந்த விறைப்பு தன்மையை சீர்படுத்த முடியாது என்பது நிச்சயமாக தெரியும் வரையில் குறைந்த விறைப்பு தன்மையை மாற்றுவதை தவிர்க்க வேண்டும். குறைந்த விறைப்புத்தன்மை நூல் வட்டில் (bobbin case) உள்ள ஒரு சிறிய மரையை மரைதிருகியால் திருப்புவதன் மூலம் சீர்படுத்தப்படும். பொதுவாக மரையை இறுக்குவதற்கு வலதுபுறமும், தளர்த்துவதற்கு இடதுபுறமும் திருப்பப்பட வேண்டும். ஒவ்வொரு முறையும் இதனை மிகவும் லேசாக திருப்ப வேண்டும்.

தையல் நீளத்தை சரிபடுத்துதல் (Adjusting the stitch length) (Fig 11)

இந்த பக்கத்தில் உள்ள அட்டவணை வெவ்வேறு வகையான துணிகளுக்கான சரியான தையல் அளவீட்டை காட்டும். பொதுவாக, நல்ல துணிகள் சிறிய தையலையும் (2.5 செ.மீக்கு 16லிருந்து 20 தையல்), நடுத்தர எடையுள்ள துணிகளுக்கு நடுத்தர தையலும் (2.5 செமீக்கு 12 தையல்) மற்றும் தடிமனான துணிகளுக்கு நீளமான தையலும் (2.5 செமீக்கு 8லிருந்து 10 தையல்) போட வேண்டும். இயந்திர பெருந்தையல் மற்றும் சுருக்கு தையலுக்கு இன்னும் நீளமான தையல்கள் தேவைப்படும். (2.5 செமீக்கு 6 விருந்து 8 தையல்).

இயந்திரத்தில் தைக்கும் பொழுது கண்காணிக்கப்பட வேண்டியவை (Trouble shooting while stitching with machine): பொதுவான கோளாறுகள் மற்றும் அதற்கான காரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இதில் பெரும்பாலானவற்றை நீங்களே கவனித்துக் கொள்ளலாம். ஒரு வேளை பெரிய கோளாறாக இருந்தால் தகுதி வாய்ந்த இயந்திர வல்லுனர்களின் உதவியை நாடலாம்.

Fig 11

வ.எண்	துணியின் அளவு	துணியின் வகை	நூலின் அளவு	ஊசியின் அளவு	2.5 செமீக்கு தேவையான தையல்
1	இலேசானது	மென்பருத்திவகை, (muslin), வெண்ணிற இழை (cambric) துணி & மென் துணி வகைகள்	50	9-11	14 - 20
2	நடுத்தர பாப்லின்	சட்டை துணி, படுக்கை விரிப்பு	40-50	14	12
3	நடுத்தர, கனமான பூவேலை செய்யப்பட்டவை, சொரசொரப்பான துணி	லேசான கம்பளி	40	16	10 - 12
4	கனமான மெத்தை துணி வகை	கம்பளி பொருட்கள்	20	18	8 - 10

கோளாறு	காரணங்கள்	தீர்வு
நூல் ஆரம்பத்தில் ஏற்படும் சிக்கல்	நூல்வட்டு (bobbin) நிரம்பி இருப்பது. நூல் வட்டு தவறாக பொருத்தப்பட்டு இருப்பது. கீழ் நூலை மேலே இழுபடாமல் இருப்பது, இரண்டு நூல்களும் அழுத்தமிதிக்கு கீழ் இழுபடாமல் இருப்பது, இயந்திரம் சரியாக எண்ணெய் இடப் படாமலும் சுத்தம் செய்ய படாமலும் இருப்பது.	பாபினில் நூலை வெளி வளையத்திற்கு சிறிது கீழ்வருமாறு சுற்ற வேண்டும். பாபினை சரியான நிலையில் பொருத்த வேண்டும். கீழ் நூல் வெளியே இழுக்கப்பட வேண்டும். இரண்டு நூலையும் அழுத்த மிதியின் கீழ் உள்ள துவாரம் மூலம் இழுத்து அழுத்த மிதியை கீழே விட வேண்டும். சுத்தம் செய்தலும், எண்ணெயிடுதலும் அந்தந்த நேரத்திற்கு நடைபெற வேண்டும்.
தையல் தள்ளிப் போவது	வளைவான ஊசி, ஊசியை தவறான பகுதியில் பொருத்தி இருப்பது, ஊசி நீளவரிவரியான நூலுடன் பொருத்தப்படுவது. ஊசி கோலுக்கு மிகவும் உயரமாகவோ, மிகவும் தாழ்வாகவோ பொருத்தப்படுவது. மிகவும் சிறிய ஊசி பொருத்துவது. ஊசியின் தவறான பகுதியில் நூல் கோர்ப்பது. தறிநாடாவில் அதிக எண்ணெய் இடுவது.	ஊசியை சரிபார்த்து சரிவர பொருத்துதல், ஊசியில் நூல் சரியாக கோர்க்கப்பட்டுள்ளது என்பதை சரிபார்த்தல். தேவையற்ற துணியில் தைத்து அதிகப்படியான எண்ணெயை அகற்றுதல்.
மேல் நூல் அறுந்து போவது	தரம் குறைந்த நூல். இயந்திரத்தில் நூல் தவறாக பொருத்தப்படுதல், ஊசி தவறான பக்கம் பொருத்தப் படுதல், ஊசிக்கு பொருந்தாத நூல், ஊசியில் தவறான பகுதியில் நூல் கோர்த்திருப்பது, மேல் விறைப்புத் தன்மை மிகவும் இறுக்கமாக இருத்தல், ஊசிதட்டு துவாரமோ தறிநாடா நூலோ கூர்மையாக இருப்பது, நெம்புகோல் உடைந்திருப்பது.	சரியான ஊசியும் நூலும் தேர்ந்தெடுக்க வேண்டும். ஊசியில் நூலை சரியாக கோர்ப்பது, மேல் விரைப்புத் தன்மை ஊசி தட்டு துவாரம் (அது மென்மையாக இருக்க வேண்டும்) மற்றும் நெம்பு கோலை சரிபார்ப்பது.
கீழ் பக்க நூல் அறுபடுதல்	தரம் குறைந்த நூல், கீழ் விரைப்புத் தன்மை இறுக்கமாக இருப்பது, நூல்வட்டில் நூல் தவறாக பொருத்தப்படுதல், ஊசித்தட்டில் முனை கூராக இருப்பது, நூல் வட்டில் நூல் முழுமையாகவோ அல்லது சமசீரின்றி இருப்பது, நூல் வட்டில் தூசி இருப்பது	நூல் வட்டை சுத்தப்படுத்தி, சரியான நூல் தேர்வு செய்து அதை சீராக சுற்றுவது, கீழ் விரைப்புத்தன்மை சரி செய்து, ஊசித்தட்டின் துவாரத்தை மென்மையாக்குவது
துணி சுருள்வது	ஒன்றோ அல்லது இரண்டு விரைப்பும் (tension) இறுக்கமாக இருப்பது. துணியை தைக்கும் பொழுது வசதியின்றி தையல் தூரமாக இருப்பது, மழுங்கிய ஊசி	சரியான ஊசியை தேர்வு செய்வது, இரு விரைப்புத் தன்மையையும் சரி செய்வது தையலை துணிக்கு ஏற்றாற் போல் சரி செய்வது

ஊசி உடைவது	துணிக்கும், நூலுக்கும் பொருந்தாத ஊசி, ஊசி வளைந்திருப்பது, தைக்கும் பொழுது துணியை இழுப்பது, அழுத்த மிதி (pressure foot) சரிவர பொருத்தப்படாதிருப்பது, தடியான தையல் விளிம்பை சிறிய ஊசி கொண்டு பொருத்துவது	அழுத்த மிதியை (pressure foot) சரிவர பொருத்துவது, துணிக்கு ஏற்ற ஊசி மற்றும் நூலை தேர்வு செய்வது, தைக்கும் போது துணியை இழுக்காமல் இருப்பது.
தையல் சரிவர அமையாதது	அழுத்த மிதியில் (pressure foot) மிக குறைவான அழுத்தம், குறையாக இருப்பது மற்றும் காணாமல் இருப்பது.	அழுத்த மிதியில் உள்ள அழுத்தத்தை சரிபார்த்தல் மற்றும் உந்துகோல் கம்பி சுருளை சரிபடுத்துவது (take up spring)

மெசினில் நூல் கோர்த்தல் (Threading the machine)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

- **மெசினில் நூல் போடுவது எப்படி என்பதை விவரித்தல்**

ஜிக்ஜாக் எம்பிராய்டரி மெசின் பல செயல்பாடுகளை கொண்டுள்ளது. மெசினின் செயல்பாடுகள் மற்றும் பாகங்கள் அறிந்த பிறகு நூலை போட வேண்டும். சரியான முறையில் நூலை போட்டால் சிக்கலை விடுவித்தல் மற்றும் தையல் தவறுகளை தடுக்கிறது.

Fig 1

Threading the upper thread



இயந்திரத்தில் மேல் பாகத்தில் நூலை பொருத்துவது (Thread the upper part of the machine)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

- **இயந்திரத்துடன் தைப்பதற்கு மேல் நூலை தயார் செய்யவும்.**

நூல் உருளையை (spool) நூல் உருளை தாங்கியில் (spool pin) வலது பக்கத்தில் இருந்து இடது பக்கத்திற்கு நகருவது போல் வைக்கவும்.

முகப்புத் தகட்டின் (face plate) மேல் இருக்கும் நூல் வழிகாட்டி மூலமாக நூலை வைக்கவும். அதற்குப் பிறகு இறுக்கம் தரும் பகுதி (tension devise) யின் பின்பக்கத்தில் இருந்து முன்பக்கம் கொண்டு வரவும்.

மறுபடியும் நூலை எடுத்து வந்து நூலை இறுக்கும் நெம்புகோலில் (take-up-lever) செருகவும்.

பிறகு நூலை எடுத்துக் கொண்டு வந்து முகப்பு தகட்டின் (face plate) கீழேயுள்ள நூல் வழிகாட்டியில் செலுத்தவும். ஊசியை பிடித்துக் கொள்ளும் நூல் வழிகாட்டி (needle holder thread guide) மூலமாக நூலை செலுத்தவும். ஊசியின் துவாரத்தில் இடது பக்கத்தில் இருந்து வலது பக்கமாக நூலை செலுத்தவும். நூலை குறைந்தது 10 செ.மீ நீளத்திற்கு இழுக்கவும். (Fig 1 & 2)

Fig 1 **Removing the bobbin case**



Fig 2 **Threading the lower thread**



மேல் மற்றும் கீழ் நூலைச் சேர்க்கவும் (Join upper and lower thread)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

- **மேல் மற்றும் கீழ் நூலைச் சேர்த்தல்.**

நகரும் தகட்டை இடது பக்கமாக, இடது கை குறிமுள்ளுடன் (pointer) இழுக்கவும். பாபின் உறையை (bobin case) இடது கையால் பிடித்துக் கொள்ளவும். நாப் (knob) ஐ மேலே வைத்து தரிநாடாவின் (shuttle) உள்பகுதியில் கிளிக் என்ற சப்தம் வரும் வரையில் மெதுவாக அழுத்தவும்.

நகருத் தகட்டை மூடவும். கீழேயுள்ளபடி பாபின் (bobbin) நூலை வெளியே கொண்டு வரவும்.

இயந்திரத்தின் மேல் நூலை இடது கையால் பிடித்துக் கொள்ளவும். வலது கையினால் இயந்திரத்தை இயக்கும் சக்கரத்தை (fly wheel) முழுமையாகச் சுற்றவும், ஆதலால் ஊசியானது பாபின் உறை (bobbin case) பகுதியில் முழுமையாக கீழே செல்லும்.

ஊசியானது அதனுடைய மிக உயர்ந்த நிலைக்கு வரும்பொழுது இது கீழேயுள்ள நூலை மேலே உள்ள நூலுடன் ஒரு வளைய முடிச்சு (loop) அமைப்பை உண்டாகும் (Fig 3). மேலேயுள்ள நூலை விடுவிக்கவும், பிறகு பாபினுடைய (bobbin) நூலின் முனையை வெளியே கொண்டு வருவதற்கு பாபினினுடைய முடிச்சு (loop) நூலை இழுக்கவும்.

நூல்களின் முனை 9 முதல் 10 செ.மீ வரை நீளத்துடன் இரண்டு நூல்களையும் ஒன்றாக சேர்த்து பிரஷர் புட் (pressure foot)ன் கீழே வைக்கவும்.

Fig 1



பாபினில் நூல் சுற்றுதல் (Bobbin winding)

நோக்கங்கள்: இப்பாடத்தின் முடிவில் நீங்கள் பெற வேண்டிய அறிவு திறன்கள்

- **பாபினில் நூல் சுற்றுவதை விவரித்தல்**
- **பாபினை பாபின் கேசில் போடும் நடைமுறையை விவரித்தல்.**

